2006,வைகாசி

பக்கங்கள் 12

Registered as a News Paper in Srilanka.

மாத மலர்.

# தமிழ் அலை

## The Tamil Alai.


இப்பொழுது மாதமிருமுறை வெளிவருகின்றது தமிழ் அலை

அலை 11

இதழ் 02

SRI LANKA NATIONAL TAMIL MONTHLY NEWS PAPER

# ஜனநாயக வழியில் மக்களின் உரிமைகளைப் பெற....



## பிரபாகரன் எமது இலக்கல்ல தமிழ் மக்களுக்கான உரிமைகள், நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதே எமது இலக்கு.

## அரசு யுத்தத்திற்குத் தயார்: ஆனால் ஆரம்பிப்பதற்கல்ல

யதார்த்தம் உணரப்பட்டு ஜனநாயகம் நிலைநாட்டப்படும் வரை ஓயாத அலையிது.

## வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் கடற்படை, பிரபா குழு உக்கிர மோதல் வன்னியில் கிபீர் அதிரடித் தாக்குதல்

கடந்த 11.05.2006 அன்று வடமராட்ச்சிக்கு கிழக்கே வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் பிரபா குழுவின் கடற்புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையே உக்கிர மோதல் இடம்பெற்றுள்ளது. திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து 720 படையினரை ஏற்றிக்கொண்டு சென்ற பேர்ள் குறூஸ் என்ற துருப்புக் காவி கப்பலையும், அதற்கு பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்த கடற்படையினரின் அதிவேக டோராப் படகின் மீதும் பிரபா குழுவினர் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இதன் போது பிரபா குழுவின் கடற்கரும்புலிப் படகுகள் டோராப் படகு மீது மோதி தாக்குதல் நடாத்தியதாகவும் இதனால் இரண்டு டோராப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. இதனால் அதிகாரிகள் அடங்களாக 18 கடற்படையினர் கணாமல் போனதாக தெரியவருகின்றது. அதேசமயம் பிரபா குழுவின் தரப்பில் இரண்டு கடற்கரும்புலிகள் உட்பட 5 பேர் கொல்லப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளதாக பிரபா குழுவினர் கூறியுள்ளனர்.

கடற்படையினர் மீதான தாக்குதலை அடுத்து கொழும்பில் உடனடியாகக் கூடிய பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தின் படி விமானப்படைக்குச் சொந்தமான கிபீர் குண்டு வீச்சு விமானங்கள் முல்லைத்தீவு, இரணைமடுப் பகுதியில் கடும் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொண்டன. அதேநேரம் மூதூரில் பிரபா குழுவின் கட்டுப்பாட்டு பாகுதிகள் மீது இராணுவமும், கடற்படையினரும் பல்குழல் ரொக்கட் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். கடற்படையினர் மீதான பிரபா குழுவின் தாக்குதலானது அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் என தெரிவித்த கண்காணிப்புக்குழு இது தொடர்பாக பிரபா குழுவை கடுமையாகச் சாடி அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது. பிரபா குழுவின் இத்தாக்குதலை இணைத்தலைமை நாடுகள் உள்ளடங்களாக சர்வதேச சமூகம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

## இராணுவத் தளபதி மீதான தற்கொலைத் தாக்குதலுக்கு உதவிய உள்வீட்டுப் பிள்ளை யார்?

கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் வைத்து இராணுவத் தளபதி மீதான தற்கொலைத் தாக்குதலுக்கு உதவிய இராணுவ தலைமையகத்தைச் சேர்ந்த உள்வீட்டுப் பிள்ளை யார்? என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகளை இராணுவப் புலனாய்வுப் பணியகமும், குற்றத் தடுப்பு பிரிவும் முடுக்கிவிட்டுள்ளது.

இராணுவத் தளபதி சரத்பொன்சேகா மீது தாக்குதல் இடம்பெறுவதற்கு சற்று நேரத்திற்கு முன் பெண் தற்கொலைக் குண்டுதாரியின் கையடக்கத் தொலைபேசிக்கு வந்த அழைப்பின் நிமிர்த்தமே தற்கொலைக் குண்டுதாரி இராணுவத் தளபதி வருவதை அறிந்துள்ளார். அந்த தொலைபேசி அழைப்பின் மூலம் இராணுவத் தளபதியின் வருகையைக் கூறிய அம் மர்ம நபர் யார் என்பதே இவ்விசாரணையின் முக்கிய திருப்பமாகும் என்கின்றனர் விசாரணையாளர்கள்.

அதேநேரம் தாக்குதல் இடம்பெறுவதற்கு சில மணிநேரத்தின் முன் தற்கொலை தாரியின் தலையை வருடியவாறு அன்பாக இராணுவ மேஜர் தரத்திலான அதிகாரி ஒருவர் உரையாடியமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பிரபா குழுவினரின் அப்பெண் தற்கொலைக் குண்டுதாரி உண்மையிலேயே கர்ப்பமானவர்தானா? என்பதை கண்டறிவதற்கான மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ள குண்டுதாரியின் இரத்தமாதிரி அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## முப்படையினருக்குத் தேவையான நவீனரக ஆயுதங்கள் இந்தியா, பாகிஸ்தானிடமிருந்து கொள்வனவு செய்யப்படுகின்றன.

இலங்கையின் முப்படையினருக்குத் தேவையான நவீனரக ஆயுதங்களை இந்தியா, பாகிஸ்தான் நாடுகளிடமிருந்து விரைவாகப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை பாதுகாப்பமைச்சு மேற்கொண்டுள்ளது. இந்தியாவிற்கு அண்மையில் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிடம் இலங்கையின் ஆயுதப் படையினருக்குத் தொடர்ந்து பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சி அளிக்கவும் நவீன ரக ஆயுதங்களை வழங்கவும் இந்தியா உறுதியளித்ததாகவும் தெரியவருகின்றது.

இதே போன்று இலங்கை ஆயுதப்படையினருக்குத் தேவையான நவீன ரக ஆயுதங்கள், ஆயுத உபகரணங்களின் பட்டியல் பாக்கிஸ்தானின் இலங்கைக்கான தூதரினூடாக பாக்கிஸ்தான் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷபாக்கிஸ்தானுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்ட போது ஆயுதக் கொள்வனவிற்கு பாக்கிஸ்தான் இணங்கியதையடுத்து இவ்வாயுதக்கொள்வனவிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள கூட்டுப்படைத் தளபதி தயாசந்தகிரி பாக்கிஸ்தான் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.ஆளில்லாத உளவு விமானங்கள், C-130 கைகுலூஸ் விமானங்கள், கிபீர் விமானங்களுக்கான குண்டுகள், லேசர் வழிகாட்டிக் குண்டுகள், ஆழ ஊடுருவித் தாக்கும் குண்டுகள் போன்றவற்றையே அரசாங்கம் அதிகளவு கொள்வனவு செய்யவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதேவேளை T-56ரக தாங்கி, டாங்கி எதிர்ப்புக் குண்டுகள் வழிகாட்டி ஏவுகணைகள், வானலைத் தொடர்பு சாதனங்கள் போன்றவற்றையும் கொள்வனவு செய்ய அரசு ஆர்வம் காட்டுவதாகவும் தெரிகின்றது.

## பிரபா குழுவினருக்கெதிரான தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் பதிலடித் தாக்குதல் தீவிரம். இதுவரை 20பேர் பலி, பல காவலரண்கள் தீக்கிரை

பிரபா குழுவினருக்கெதிரான தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் விசேட தாக்குதல் படையணியினரின் பதிலடித் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. பிரபா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஊடுருவியே இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் காந்தாக் காடு இராணுவ முகாமை பிரபா குழுவினர் தாக்கியதைத் தொடர்ந்தே தமது பதிலடித் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளதாக கூறுகின்றார் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் தூயவன்.

பதிலடித் தாக்குதலின் முதற்கட்டமாக கடந்த 02.05.2006 அன்று காலை 10:50 மணியளவில் மூதூரிலுள்ள பிரபா குழுவின் கட்டுப்பாட்டு பகுதியான கட்டைமுறிச்சான் நாவலடிப் பகுதியிலுள்ள பிரபா குழுவின் முன்னரங்கு காவலரண்கள் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் விசேட படையணியினரால் தாக்கியழிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் இரு முன்னரங்கு காவல் நிலைகளில் இருந்த 8 பிரபா குழு உறுப்பினர்கள் சம்பவ இடத்தில் கொல்லப்பட்டதுடன் 2பேர் படுகாயமடைந்தனர். அத்துடன் இரு காவலரண்களும் தீயிட்டு கொழுத்தப்பட்டன. இத்தாக்குதலின் போது முன்னரங்கு காவல் நிலைகளில் இருந்த பிரபா குழுவினது ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதல் மங்களன் மாஸ்டர் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் விசேட தாக்குதல் படையணியினராலேயே மேற்கொள்ளப்பட்டது.

பதிலடித் தாக்குதலின் இரண்டாம் கட்டம் கடந்த 09.05.2006 அன்று இடம்பெற்றது. சம்பவதினம் பிரபா குழுவினரால் ஏற்கனவே நடாத்தப்பட்ட காந்தாக்காடு இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் விசேட தாக்குதல் படையணியினர் மூதூர் சென்று அங்கிருந்து மூன்று பிரிவுகளாகப்பிரிந்து ஏக காலத்தில் கட்டுமுறிச்சான், சம்பூர், இறால் மடு பகுதியிலுள்ள பிரபா குழுவின் நிலைகளைத் தாக்கினர். ஏக காலத்தில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் பிரபா குழுவினர் திணறிப் போனார்கள். இத்தாக்குதலில் பிரபா குழுவின் தரப்பில் 12 பேர் கொல்லப்பட்டதாக அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் பிரபா குழுவின் பல காவல் நிலைகளும் தாக்கியழிக்கப்பட்டன. இத்தாக்குதல் ஆனது தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் இராணுவத் தளபதி மார்க்கனின் விசேட நெறிப்படுத்தலிலும், வழிகாட்டலிலும் இடம்பெற்றதாக தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் தூயவன் கூறினார்.

## பிரபா குழுவின் உறுப்பினர்கள் கிழக்கில் இருந்து வன்னிக்குச் சென்றதாக கூறுவது அப்பட்டமான பொய்

பிரபா குழுவின் உறுப்பினர்கள் கடந்த 30ம் திகதி கிழக்கிலிருந்து முல்லைத் தீவிற்கு தமது கடற் பாதுகாப்புடன் தமது வள்ளங்களில் பயணம் செய்ததாக பிரபா குழு கூறியிருப்பது அப்பட்டமான பொய் எனவும் இது தாம் பலமானவர்கள் என்று மக்களை நம்ப வைக்கும் ஒரு பிரச்சாரப் பொய்யாகும் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் தினம் பிரபா குழுவின் சில கடற்களங்கள் வன்னிப் பகுதியில் இருந்து கொக்குத்தொருவாய் பகுதிக்குள் ஊடுருவ முனைந்த போது கடற்படையினர் அதனை தடுத்து நிறுத்தியுள்ளனர். அதன்பின் கடற்படையினர் வட-கிழக்கு கடற்பகுதியில் தீவிர பணியில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் அதன்பிறகு வட-கிழக்கு கடற்பகுதியில் பிரபா குழுவின் கடல் நடமாட்டம் இருக்கவில்லை என்றார் கடற்படைப் பேச்சாளர்.

இதே போன்று மே மாதம் 1ம் திகதி காலை 5:20 மணியளவில் திருமலையில் இருந்து வன்னி நோக்கி செல்ல முயன்ற பிரபா குழுவுக்கும் கடற்படையினருக்கும் இடையே மோதல் மூண்டது. இதில் பிரபா குழுவின் ஒரு கடல் வள்ளம் மூழ்கடிக்கப்பட்டது. இதன் போதும் பிரபா குழுவினர் வன்னி செல்லும் முயற்சி கைகூடவில்லை.

இவ்வாறான நிலையில் திடீரென தமது உறுப்பினர்கள் கிழக்கில் இருந்து கடல் வழியாக வன்னிக்கு வந்தனர் என்று கூறுவது அப்பட்டமான பொய் என்கின்றார் கடற்படைப் பேச்சாளர் கமாண்டர் டி.பி.கே திஸாநாயக்க

## கொழும்பில் பாரிய தாக்குதல் நடாத்த பிரபா குழு திட்டம்.

கொழும்பில் பாரிய குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ள பிரபாகுழு திட்டமிட்டுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன. கொழும்பிலுள்ள முக்கிய வர்த்தக மையங்கள், இராணுவ நிலைகள், அரசியல்வாதிகளை இலக்குவைத்தே இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் எனக் கூறப்படுகின்றது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கையின்போது கொழும்பில் ஊடுருவியுள்ள 08 பிரபா குழுவினரின் தற்கொலைக் குண்டுதாரிகள் பற்றிய விபரங்கள் கிடைத்துள்ளதாகவும் இவர்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் இதுவரை நடாதத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது நான்கு முக்கிய பிரபாகுழுவின் உறுப்பினர்களைக் கைதுசெய்துள்ளதாகவும் இவர்களிடமிருந்து பல முக்கிய தகவல்கள் பெறப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை கொழும்பில் பாரிய குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ள பிரபா குழுவினரின் லொறி ஒன்று கொழும்பு வந்துள்ளதாகவும், அந்த லொறியில் குண்டுகள் பொருத்தி குறித்த இலக்கை தாக்குவதே பிரபா குழுவின் நோக்கமாகும். இம் மர்ம லொறி ஏற்கனவே மன்னாரிலிருந்து கொழும்பிற்கு மீன் ஏற்றிவருவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ் லொறியின் சாரதியாக சிங்கள இனத்தைச் சேர்ந்த சாரதியொருவரே நியமிக்கப்பட்டிருந்ததாகவும் இவருக்கு மாதம் பெருமளவிலான பணம் வழங்கப்படுவதாகவும் தெரியவருவதாக புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன. இம் மர்ம லொறியை தேடிக்கண்டுபிடிக்கும் பணியில் புலனாய்வுப் பிரிவினர் மும்முரமா ஈடுபட்டுள்ளனர்.

## பிரபா குழுவின் புலனாய்வு முக்கியஸ்தர் மரணம், அவரது மெய்ப்பாதுகாவலரும் பலி.

14.05.2006 காலை 9.20 மணியளவில் பிரபா குழுவின் புலனாய்வுப் பிரிவு முக்கியஸ்தரான மதுரன் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அவருடன் அவரது மெய்ப்பாதுகாவலர் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவம் மூதூர் வெருகல் பாலம் பகுதியில் இடம் பெற்றுள்ளது. கிழக்கு மாகாணத்தில் மதுரன் பிரபா குழுவினரால் பல அப்பாவியான இளைஞர்கள் கொல்லப்படுவதற்கும், காணாமல் போவதற்கும் காரணமாய் அமைந்தவர் எனக் கூறப்படுகின்றது.

# அலை

**ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல விழுந்தபோதெல்லாம் எழுந்தான் என்பதுதான் பெருமை.**

## வைகாசி அலை 2006


இல,39. கோவிந்தன் வீதி, மட்டக்களப்பு
மின்னஞ்சல்: tamilalainews@yahoo.com
இணையத்தளம்: WWW.tamilalai.org
தொலைபேசி: 0652222102


**அன்புடன் வாசகர்களுக்கு, மீண்டும் மறு தமிழ் அலையின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி**

புரிந்துணர்வு கைச்சாத்திடப்பட்ட பிறகு இலங்கையில் பெயரளவிலான சமாதானச் சூழல் இருந்த போதும் இரு தரப்பினரும் பிரகடனப்படுத்தாத யுத்தமொன்றை நடாத்தி வருகின்றனர். ஆனால் அப் பிரகடனப்படுத்தாத யுத்தம் இப்போது மட்டுப்படுத்தப்பட்ட பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தமாக மாறியுள்ளது. இதனை ஏன் மட்டுப்படுத்தப்பட்ட பிரகடனப்படுத்திய யுத்தம் என வரையறுக்கின்றோமென்றால்,

இது வரை இரு தரப்பும் தாம் நடாத்திய தாக்குதலுக்கு உரிமைப் கோரவில்லை. அனால் இப்போது உரிமை கோரித் தாக்குமளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது. கடந்த11.05.2006அன்று வடமராட்சி வெற்றிலைக் கேணி கடற்பரப்பில் சென்று கொண்டிருந்த துருப்புக்காவி கப்பல் மீதும் அதற்கு பாதுகாப்பு வழங்கிய டோராப் படகு மீதும் பிரபா குழு நடாத்திய தாக்குதலானது மிக மிக மோசமான யுத்த நிறுத்த மீறல் என கண்காணிப்புக் குழு சாடியுள்ளது.

பிரபா குழு யுத்த நிறுத்தை மோசமாக மீறுவது இது முதற்தடவையல்ல. ஆனாலும் இதற்காக தேசிய ரீதியாகவோ, சர்வதேச ரீதியிலோ ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. வெறும் கண்டன அறிக்கைகள் மட்டும் பிரபா குழுவை கண்டிக்கப்பொவதில்லை. இவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது.

எனவே புரிந்துணர்வு உடன்படிக்கை இன்று பிரபா குழுவால் கேலிக் கூத்தாக்கப்பட்டுள்ளது. இது முழு நாட்டையும் பால்படுத்தும். பிரபா குழுவின் பயங்கரவாதத்தை முறியடிக்கும் ஆக்கபூர்வமான செயற்திறன் மிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும். இதற்கு சர்வதேச சமூகம் பிரதான பாத்திரம் வகிக்க வேண்டும்.

இப் பயங்கர வாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை குறித்து தமிழ் மக்களிடம் நியாயமான அச்சம் காணப்படுகின்றது. இதனால் தாம் பாதிக்கப்படலாம், தண்டிக்கப்படலாம் என அரசும், படையினரும் ஒன்றை நன்கு உணர வேண்டும். பிரபா குழு என்பது வேறு. தமிழ் மக்கள் என்பது வேறு. பிரபாகரனின் பயங்கரவாத நடவடிக்கையை எந்தத் தமிழ் மகனும் ஆதரிக்கவில்லை. எனவே இவற்றுக்கும் தமிழ் மக்களின் அச்சத்தைப் போக்கி அவர்கள் நம்பிக்கை கொள்ளும் முகமாக பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் தன்மையுடன் செயற்படுவது அவசியமாகும்.

# ஜனநாயக வழியிலே மக்களின் உரிமைகளைப்பெற அர்ப்பணிப்புடன் உழைப்போம்

நேர்காணலில் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் கருணா அம்மான்


சென்ற அலையின் தொடர்ச்சி........


**கேள்வி: பழிக்குப் பழி வேண்டும் கொலைகள் ஏதோவொரு புள்ளியில் நிறுத்தப்படவேண்டும் என நீங்கள் எண்ணவில்லையா? அவ்வாறாயின் அது எந்தப் புள்ளி?**

விடை: இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் இது பிரபாகுழுவின் கைகளில் உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களுடைய கொலை செய்யும் ஆட்சி முறையை தொடரும் வரை பழிக்குப் பழிவாங்கும் கொலைகளும் இடம்பெறத்தான் போகின்றன. எங்களுடைய புலனாய்வுத் தகவலின் படி இது ஒரு மிக மோசமான நிலைக்கு தள்ளப்படும். காரணம் பிரபாகுழு உறுப்பினர்கள் மத்தியில் விரக்தி தோன்றி உள்ளது. இது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பாரிய பிரச்சினையாக அமையும்.

**கேள்வி: உங்கள் கோட்டையான மட்டக்களப்பில் நீங்கள் இப்பொழுது ஒரு அரசியல் பிரிவை அமைத்துள்ளீர்கள் உண்மையிலேயே நீங்கள் அரசியல் வேலைகளில் ஈடுபடப்போகின்றீர்களா? அல்லது பிராபா குழுவைப் பிளவுபடுத்தும் இன்னுமொரு முயற்சியா?**

விடை: நான் கூறியது போல் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் (TMVP) ஒரு அரசியல் இராணுவக் கட்டமைப்பைக் கொண்ட அமைப்பு. நாங்கள் எங்களுடைய அரசியலை பிரபாகுழுவை பழிவாங்குமோர் யுத்த தந்திரமாக பொருள் கொள்ளவில்லை. எங்களுடைய அடிப்படை நோக்கமானது எங்களுடைய சமூகத்தை ஜனநாயக வழிப்படுத்தி அவர்களுக்கு அதிகாரத்தை வழங்குவது பாசிச பிரபாகுழு மறுக்கப்பட்ட சிவில் சமூகத்தின் சகஜ நிலையை சிவில் சமூகம் பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் உழைப்போம்.

எங்களுடைய இறுதி நோக்கம் ஓர் உள்நாட்டு விடயங்களில் சுதந்திரமுடைய சமஸ்தானங்களில் ஐக்கிய ஒப்பந்தத்திற்கு உரிய அரசியல் நிர்ணயத்தின் கீழ் ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்பக்குள் ஓர் அரசியல் தீர்வைக் காண்பதே.

**கேள்வி: பிரபா குழ உங்களை நடாத்திய விதத்தை கசப்பானதொன்றாக நீங்கள் கருதுகின்றீர்களா? நீங்கள் பழிக்குப் பழிவாங்க நாடுகின்றீர்களா? அல்லது இது என்ன?**

விடை: கசப்பு அத்துடன் பழிவாங்கல் போன்ற கடுமையான சொற்களை பிரயோகித்துள்ளீர்கள். இவை இரண்டும் எமது வழிகள் அல்ல. கசப்பான பழிவாங்கல்கள் செயற்பாடுகளில் மூழ்காது. நான் எப்பொழுதும் ஒரு வெற்றிகரமான முடிவை நோக்கிப் பார்க்கின்றவன். பிரபாகுழு என்னை ஒரு கெட்ட மனிதன் என வீண் பழி சுமத்திய நேரம் நான் புண்படுத்தப்பட்டு இருக்கலாம். நான் அதில் இருந்து வெகுதூரம் சென்று விட்டேன். நான் யார் என்பதை எனது மக்கள் இப்பொழுது உணர்வார்கள். எங்களுடைய வேலை வெற்றியை முன்னோக்கியதாகவும் ,

எங்களுடைய மக்களின் அபிலாசைகளுக்கு பதில் அளிப்பதாகவும் இருக்கும். எனது கைகளில் ஒரு மாபெரும் பொறுப்பு உள்ளது. நான் சிறிய காலப்பகுதிக்குள் ஓர் அர்த்தமான முன்னேற்றத்தை உருவாக்கியுள்ளேன் . பிரபாகுழுவுடனான அந்த ஒரு செயற்பாடும் அரசியல் மற்றும் தற்பாதுகாப்பு நோக்கங்களை கொண்டு இருக்குமே தவிர பழிவாங்கும் நோக்கமல்ல.



**கேள்வி: நீங்கள் இன்னும் தனியான தமிழ் நாட்டில் நம்பிக்கை கொண்டுள்ளீர்களா? அல்லது ஈ.பி.டி.பி தலைமைத்துவத்தைப் போல் ஐக்கிய (அல்லது ஒன்றை சார்ந்த) இலங்கையில் நம்பிக்கை வைத்துள்ளீர்களா?**

விடை: உலகம் இன்று உலகலாவிய ரீதியாக முன்னேற்றப் பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது . ஒற்றுமை, ஒன்று சேர்வு மற்றும் பலதரப்பட்ட பரந்த கோட்பாடுகளிலேயே இன்றைய நவீன காலம் அல்லது யுகம் வேலை செய்யமுடியும். எங்களுடைய மக்கள் யுத்தத்தாலும், பயங்கரவாதத்தாலும் களைப்படைந்து போய் உள்ளார்கள். அவர்கள் சமாதானத்துடனும், கௌரவத்துடனும் வாழவே விரும்புகின்றார்கள். நான் இன்னும் சொல்வதற்கு விரும்புகின்றேன். மக்கள் யுத்தங்களாலும், பிரபாகுழுவின் பயங்கரவாதத்தாலும் வெறுப்படைந்தவர்களாக களைப்புற்று இருப்பதால் யுத்த வணிகம் செய்யும் அரசியல் அதிகளவில் உதவிகளைச் செய்யக்கூடிய அரசியலாக மாறும் ஓர் சமாதான மாற்றம் இந்த இலங்கை தேசத்திற்கு தேவை. நாங்கள் ஐக்கிய இலங்கைக்கானவர்கள். நாங்கள் முரண்பாட்டுக்கு உள்நாட்டு விடயங்களில் சுதந்திரமுடைய சமஸ்தானங்களில் ஐக்கிய ஒப்பந்தத்திற்கு உடைய ஒரு தீர்வையே விரும்புகின்றோம். நாங்கள் வேற்றுமையில் ஒற்றுமையைக்கான விரும்புகின்றோம். இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் மரியாதையுடனும் , கௌரவத்துடனும், ஒற்றுமையாகவும் வாழவேண்டும் என விரும்புகின்றோம். உப கண்டமான இந்தியாவிலும், உலகத்திலும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் பொருளாதார அபிவிருத்தியில் இலங்கையும் இணையவேண்டும் என நாம் விரும்புகின்றோம் . அண்மைக்காலங்களில் உலக நாடுகளில் விடுதலைத் தனிப்பிரிவு என்ற பெயரில் புரியப்படும் யுத்தங்களின் இறுதி நிலையை எதிர்பார்த்து நிற்பதோடு அவை முடிவடைய வேண்டும் எனவும் விரும்புகின்றோம் . இவையாவற்றையும் சிங்களவர்கள் விவேகமாக யோசிக்கும் பாங்கிலேயே வெற்றிகரமாக அடையமுடியும். இலங்கை அரசியலை ஒரு நவீன, ஒப்பற்ற, உள்நாட்டு விடயங்களில் சுதந்திரமுடைய சமஸ்தானங்களின் ஐக்கிய ஒப்பந்தத்துக்குரிய திட்டமாக மாற்றுவதற்கு ஐக்கிய இலங்கை என்ற கருப்பொருளில் சிங்களவரின் சார்பில் அனுகூலமான இரண்டு அரசியற் கட்சிகள் ஒன்றிணைந்து கட்டாயமாக முக்கிய பங்காற்ற வேண்டும்.

சிங்களவர்களும், தமிழர்களும். முஸ்லிம்களும் அவர்கள் அவர்களுடைய உறுதியான ஒப்பந்தத்தின் மூலம் ஒரு யாப்பின் கீழ் வந்து உள்நாட்டு விடயங்களில் சுதந்திரமுடைய சமஸ்தானங்களில் ஐக்கிய ஒப்பந்தத்திற்குரிய ஒரு புதிய அரசியல் சட்டதிட்டத்தை ஸ்தாபிப்போம். அரசியல் சட்டதிட்டங்களில் மாற்றங்கள்

**இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் மரியாதையுடனும் கௌரவத்துடனும், ஒற்றுமையாகவும் வாழவேண்டும் என விரும்புகின்றோம்.**

மேற்கொள்ளும் போது ஒன்றிணைந்து செயற்படும் போது ஐக்கிய இலங்கைக்கான அத்திவாரத்தையிட முடியும். எங்கள் மேல் சுமர்த்தப்பட்ட சிங்களவர்களின் அரசியல் சட்டதிட்டங்களின் கீழ் நாம் வாழ்கின்றோம் என்ற பலமான உணர்வு முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும்.

**கேள்வி: இந்தியாவைப் போன்று உள்நாட்டு விடயங்களில் சுதந்திரமுடைய சமஸ்தானங்களின் ஐக்கிய ஒப்பந்தத்திற்குரிய திட்டத்தைப் போன்ற ஒன்றின் கீழா?**

பதில்: உள்நாட்டு விடயங்களில் சுதந்திரமுடைய சமஸ்தானங்களில் ஐக்கிய ஒப்பந்தத்துக்குரிய அமைப்பு பொதுவான சம்மதத்தையுடைய அரசியல் மூலமே தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தியாவில் உள்ள இந்த உள்நாட்டு விடயங்களில் சுதந்திரமுடைய சமஸ்தானங்களின் ஐக்கிய ஒப்பந்தத்துக்குரிய திட்டம் ஆரம்பிப்பதற்கு ஒரு முன்மாதிரியான ஆனால் திருத்தங்கள் செய்யப்படுவதற்கு ஏதுவாக இருக்கவேண்டும்.

**கேள்வி: ஒரு காலத்தில் நீங்கள் கெரிலாத் தலைவராக முக்கிய பங்காற்றிய தமிழ் சுதநதிரப் போராட்டத்தில் உங்கள் கருத்தின் படி பிழை நடந்தது?**

பதில்: பல விடயங்கள் பிழைத்துப் போய் உள்ளன. பிரபாகுழு கொலை செய்யும் இயந்திரமாக தனது விசையை, பலத்தையும், காரியத்தையும் மாற்றியதே அடிப்படைக் காரணமாகும். அது தனது நோக்கத்திலிருந்து வழி தவறி தேசிய விடுதலைப் போராட்டம் என்ற போர்வையில் அது சார்ந்திருந்த மக்களையே கொன்றது. தமிழ் தேசிய போராட்டம் பிரபாகுழுவின் பாசிச சர்வதிகாரமாக மாற்றம் அடைந்தது. மக்கள் மட்டுமன்றி ஒரு காலத்தில் பெருமை பட்டுக்கொண்ட எங்களுடைய கலாச்சாரம், சமயங்கள், கல்வி இவையாவும் பிரபாகுழுவின் மறுக்கக் கூடாத கொள்கைகளுக்கு பலியாகின. தமிழர்கள் தமிழ் விடுதலைப் போராட்டத்தை சிங்களவர்களின் அழுத்தங்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவே ஆரம்பித்தார்கள். ஆனால் அதிஷ்டவசமாக நாங்கள் சிங்களவரின் அழுத்தத்திலிருந்து பிரபாகுழுவின் அழுத்தத்திற்கு நகர்ந்து உள்ளோம். எங்களுடைய மக்கள் இப்பொழுது இரண்டு பேருக்குமிடையில் நசுக்கப்படுகின்றார்கள்.இதில் பிரபாகுழு தம்மை மிக மோசமான . அழுத்தக்காரர்களாக உறுதிப்படுத்தியுள்ளனர்.


தொடரும்.........

# அரசு யுத்தத்திற்குத் தயார்: ஆனால் ஆரம்பிப்பதற்கல்ல?

உத்தமன்



இலங்கையில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் நிகழ்வுகள் நிச்சயமாக நிரந்தரமான சமாதானத்தை நோக்கிய நகர்வுகளாகத் தென்படவில்லை. சமாதானத்திற்கு சமாந்தரமான செயற்பாடுகளாகவே தென்படுகின்றன. வடகிழக்குப் பகுதிகளில் மட்டுமே இடம்பெற்றுவந்த பயங்கரவாதத் தாக்குதல்கள் கொழும்புவரை நீண்டுள்ளது.

கொழும்பில் இராணுவத் தலைமையகத்தினுள் புகுந்து இராணுவத் தளபதி மீது பிரபா குழு தற்கொலைத் தாக்குதல் நடாத்தியதும் அதனைத் தொடர்ந்து முப்படையினரும் மூதூரில் பிரபா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடாத்திய தாக்குதல்களும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் நிச்சயமற்ற தன்மையை உரத்துக் கூறின. இதனை பாதி பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தம் என்கின்றார் பிரபல அரசியல் ஆய்வாளர் கீல பொன்கலன்.

2002ம் ஆண்டு புரிந்துணர்வு உடன்படிக்கையானது அன்றைய ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திற்கும் பிரபா குழுவினருக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட பிறகு இலங்கையில் சமாதானம் மலர்ந்து தமிழ் மக்கள் நிம்மதியாக வாழலாம் என்ற நம்பிக்கை தமிழ் மக்களின் மனங்களில் மலர்ந்தது உண்மைதான். ஆனால் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட சில நாட்களிலேயே பிரபா குழு அதில் கைச்சாத்திட்டது தமிழ் மக்களுக்கு உரிமைகளும், நிரந்தர சமாதானமும் கிடைக்கவேண்டும் என்பதற்காகவல்ல மாறாக சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்புவதற்கும் தம்மைப் பலப்படுத்தவுமே என்பது புலனாகியது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை கண்காணிக்க ஸ்கன்டினேடிய நாடுகளின் பிரதிநிதிகள் குழுவைக் கொண்ட கண்காணிப்புக் குழுவும் அமைக்கப்பட்டது. ஆனாலும் இது ஒரு அதிகாரமற்ற அமைப்பாகவே உள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின் இரு தரப்பினரும் உடன்படிக்கையை மீறியுள்ளனர். அதிலும் குறிப்பாக பிரபா குழுவினர் பகிரங்கமாகவே பலதடவைகள் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறி மாற்றுக் கருத்துக்கள்கொண்ட தமிழ் உறுப்பினர்கள் மீதும், புலனாய்வுப் பிரிவினர்கள் மீதும் தாக்குதல்களை மேற்கொண்டனர். அப்போதெல்லாம் கண்காணிப்புக் குழு அறிக்கை மட்டுமே விட்டது. அது மட்டுமே அதனால் செய்யக்கூடியது.

புரிந்துணர்வு கைச்சாத்திடப்பட்ட பின் பதவியேற்றுள்ள இரண்டாவது அரசாங்கம் இதுவாகும். முன்னைய அரசாங்கங்களைவிட மஹிந்தவின் இவ்வரசாங்கம் கடும் போக்குடையது எனக் கருதப்படுகின்றது. பிரபா குழுவினரால் புரிந்துணர்வு உடன்படிக்கை பலதடவை மீறப்பட்டபோதும் அதில் மிகவும் பாரதூரமாகக் கருதப்பட்டது சந்திரிக்காவின் ஆட்சிக்காலத்தில் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரைக் கொலை செய்தமை. அப்போது அதற்கெதிராக பல சர்வதேச நாடுகள் பிரபா குழுவை நேரடியாகக் குற்றஞ்சுமத்தின. ஐரோப்பிய யூனியன் பயணத்தடையும் விதித்தது. ஆனாலும் பிரபா குழு தம் தவறுகளை திருத்திக்கொள்ளவில்லை.

அதன் பின்னர் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷபதவியேற்றவுடன் வடகிழக்குப் பகுதிகளில் தொடராக கிளைமோர் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றதிலிருந்து இதுவரை சுமார் 150ற்கும் மேற்பட்ட படையினர் பிரபா குழுவால் கொல்லப்பட்டுள்ளனர். ஆனாலும் மஹிந்தவின் அரசாங்கம் புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து விலகுவதாகவோ யுத்தத்தை ஆரம்பிப்பதாகவோ அறிவிக்கவில்லை.

பிரபா குழுவால் நடாத்தப்பட்டுவரும் தாக்குதல்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல கடந்த 25.04.2006அன்று இராணுவத் தலைமையகத்தினுள் வைத்து இராணுவத் தளபதி மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

தாக்குதல் இடம்பெற்ற அன்று ஏற்கனவே நாட்டு மக்களுக்கான ஜனாதிபதியின் உரை திட்மிடப்பட்டிருந்தது. தாக்குதலின் பின் ஜனாதிபதியின் உரை மிக முக்கியத்துவம் பெற்றது. தாக்குதலுக்கு எதிராக பிரபா குழுவினருக்கெதிரான யுத்த பிரகடனம் செய்யப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனாலும் அன்றிரவு கூறப்பட்ட ஜனாதிபதியின் உரை யுத்தப் பிரகடனம் எதனையும் கொண்டிருக்காதபோதும் பயங்கரவாதத்திற்கு எதிராக போராட சர்வதேச ஒத்துழைப்பை கோரி நின்றது. ஆனால் இராணுவத் தளபதியின் மீதான தாக்குதலைத் தொடர்ந்து ஜனாதிபதியின் தலைமையில் கூடிய பாதுகாப்புச் சபை தாக்குதலுக்கு எதிராக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பிரபா குழுவின் இலக்குகள் மீது தாக்குதல் நடாத்துவது என முடிவுசெய்தது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியால் முப்படையினருக்கும் உத்தரவுகள் பறந்தன. பிரபா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதியான மூதூரில் சில பகுதிகளில் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. பிரபா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்கள் சர்வதேச சமூகத்தின் கருத்தறியும் நடவடிக்கையாகவும் பிரபா குழுவுக்கு ஒரு முக்கிய செய்தியைச் சொல்லும் வழியாகவும் அமைந்தது.

இவ்வாறான நிலையில் கடந்த 11.05.2006 அன்று பிரபா குழுவினர் மீண்டுமொருதடவை தேசிய, சர்வதேச ரீதியில் தாம் பலமானவர்கள் என்ற மாயையை தோற்றுவிக்கவும், யுத்தமொன்று மூண்டால் தாம் சந்திக்க தயார் என்ற எண்ணப்பாடை தெற்கில் அவசரமாக விதைக்கவும் ஒரு தாக்குதல் நாடகத்தை அரங்கேற்றினர். ஆனால் அந்நாடகம் இறுதியில் பிரபா குழுவிற்கே விபரீதமாக முடிந்ததுதான் பரிதாபம்.

கடந்த 11.05.2006 அன்று காங்கேசன்துறை கடற் தளத்திலிருந்து பேர்ள் குறூஸ் என்ற துருப்புக் காவிக் கப்பலின் மூலம் 740 படையினர் திருகோணமலையை நோக்கி பயணமானார்கள். பேர்ள் குறூஸ் என்ற இந்தக் கப்பல் தனியாருக்குச் சொந்தமானது இது யுத்தக் கப்பல் அல்ல. பாதுகாப்பு அமைச்சினால் துருப்பினரைக் கொண்டு செல்ல வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்தது. இந்தக் கப்பலில் பயணஞ் செய்த துருப்பினர்கள் நிராயுத பாணிகளாகவே சென்றனர்.

எனவே இந்தக் கப்பலுக்குப் பாதுகாப்பாக கடற் படையினரின் அதிவேக டோராப் படகுகள் 5 உடன் சென்றன. அச்சமயம் பாதுகாப்பு வழங்கிய டோராப் படகின் கப்டன் கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்திற்கு ஒரு செய்தியை அனுப்பியிருந்தார். வடமராட்சிக் கடற்பரப்பில் பிரபா குழுவின் கடற் கலங்களின் நடமாட்டம் அதிகமாகவுள்ளது, அவர்கள் ஏதேனும் பாரிய தாக்குதலுக்கு தயாராகின்றார்கள் என்றே நினைக்கின்றோம். மேற்கொண்டு என்ன செய்வது என்பதே டோராப் படகின் கப்டன் அனுப்பிய செய்தி.

அச்சமயம் கடற்படைத் தலைமையகத்தின் கடமையிலிருந்த கடற்படைத் தளபதி வசந்த கொரன்கொட உடனடியாக கட்டுப்பாட்டு அறையிலிருந்து தேவையான உத்தரவுகளை வழங்கிக்கொண்டிருந்தார். கடற்படையினரின் படகுகள் வெற்றிலைக்கேணி கடற்பரப்பை அண்மித்தவுடன் பிரபா குழுவினர் தாக்க ஆரம்பித்தனர். அவர்களின் தற்கொலைப் படகுகள் மூன்று துருப்புக் காவிக் கப்பலை நெருங்கி வருவதாக டோராப் படகின் கப்டன் கடற்படைத் தலைமையகத்திற்குத் தகவல் அனுப்பினார்.

நிலைமையின் விபரீதத்தை உணர்ந்தவுடன் பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் உடனடியாகவே கடற்படைத் தலைமையகம் விரைந்தனர்.

பிரபா குழுவினர் தாக்குதல் நடாத்திக் கொண்டு தற்கொலைப் படகுகள் துருப்புக்காவிக் கப்பலை நெருங்க வழியேற்படுத்திக் கொடுப்பதாக கடற்படைத் தலைமையகத்திற்கு தகவல் அனுப்பப்பட. தற்காப்புத் தாக்குதல் நடாத்திக்கொண்டே ஆழ் கடலுக்குச் செல்லுமாறு கட்டளையிட்டார் கடற்படைத் தளபதி. தொடர்ந்து இந்தியாவிடம் உதவியும் கோரப்பட்டது.

> **இராணுவத் தளபதி மீதான தாக்குதலையடுத்த நிலைமையை அரசு மிகத் திறமையாகக் கையாண்டுள்ளது.**

இலங்கை அரசாங்கம் விடுத்த அவசர உதவிக்கு இந்தியா அளித்த பதில். எதிர்காலத்தில் பிரபா குழுவுடன் யுத்தமொன்று மூழுமானால் பிரபா குழுவை துவம்சம் செய்ய அரசுக்கு பூரண உதவிகள் வழங்கும் என்பதை மறைமுகமாக உணர்த்தி நின்றது. கடற்படை உதவி மட்டுமல்ல தேவைப்பட்டால் விமானப் படையின் உதவியும் வழங்கப்படும் என்று சொன்னது மட்டுமன்றி செயலிலும் காட்டியது இந்தியா.

பிரபா குழுவின் இத்தாக்குதலுக்கு பதிலடியாக வன்னி, முல்லைத்தீவு, இரணைமடுமீது கிபீர் தாக்குதல் மேற்கொள்ள உத்தரவிட்டது அரசாங்கம். உண்மையிலேயே பிரபா குழு இத்தாக்குதலை ஏன் மேற்கொண்டனர் என்றால். அரசாங்கத்தின் யுத்த வலிமை மீது அரசாங்கத்திற்கும் தென்னிலங்கை மக்களுக்கும் சந்தேகம் ஏற்பட்டு தம்மீதான யுத்தத்தை அரசு ஆரம்பிக்கக் கூடாது என்ற நப்பாசையில்தான். தாம் மிகவும் பலவீனமாகவுள்ள இச்சந்தர்ப்பத்தில் அரசு யுத்தம் தொடுத்தால் தாம் காணமல் போய்விடுவேம் என்ற பயம்தான் பிரதான காரணம்.

உண்மையிலேயே பிரபா குழுவின் தொடர் பயங்கரவாதத் தாக்குதலுக்கு மத்தியில் மஹிந்தவின் அரசு காட்டிய பொறுமையானது, அசாத்தியமானது. போற்றப்படவேண்டியது எனும் கருத்து சர்வதேச சமூகத்திடம் ஊன்றியுள்ளது.

இராணுவத் தளபதி மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டித்த சர்வதேச சக்திகள் இலங்கை அரசாங்கம்தான் பதில் தாக்குதலை கண்டிக்கவில்லை.தாம் பிரபா குழுவின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது பாரிய தாக்குதல் மேற்கொள்வதனால் அதற்கான சர்வதேசத்தின் நாடித்துடிப்பு எவ்வாறு அமையும் என்று பார்ப்பதற்கே . மூதூரில் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்கள் அரசாங்கத்தினால் நடாத்தப்பட்டன. இம் முயற்சியில் அரசாங்கம் தேவையான வெற்றியைப் பெற்றுள்ளது என்றே கூறலாம்.

இது அரசாங்கத்திற்கு பெரும் உற்சாகமாகவும் பிரபா குழவுக்கு பாரிய அடியாகவும் அமைந்தது மட்டுமன்றி பதிலடித் தாக்குதல்கள் மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷஒரு செய்தியையும் சொல்லியுள்ளார். அதாவது நாட்டில் பயங்கரவாதத் தாக்குதல்கள் அதிகரிக்கும்போதுதான் அமைதியின் பார்வையாளராக இருக்கப்போவதில்லை. என்பதை தமது பாணியில் உரத்துக் கூறியுள்ளார்.

இலங்கை போன்ற சிறிய இராணுவ பொருளாதார ரீதியில் பலவீனமான நாட்டில் சமாதானமோ சண்டையோ யார் வெற்றிபெறப்போவது என்பதைத் தீர்மானிப்பது சர்வதேச சக்திகளே இந்நிலையில் பிரபா குழுவுக்கெதிரான சர்வதேச ஆதரவை அரசாங்கம் கணிசமான அளவு பெற்றிருக்கின்றது.

கனடாவின் கன்சர்வேட்டிங் அரசாங்கம் பிரபா குழுவைத் தடை செய்தமை அரசாங்கத்திற்கு புது உற்சாகத்தையும் தென்பையும் அளித்துள்ளது. இத்தகைய நிலையில் ஜெனீவாவில் நடைபெறவிருந்த இரண்டாங் கட்டப் பேச்சுவார்த்தையை பிரபா குழுவினர் தமது கிழக்குத் தளபதிகளின் போக்குவரத்தைக் காரணங் காட்டி ஒத்தி வைத்தமையும் அரசாங்கத்திற்கு பாரியளவான சர்வதேச அறுவடையைப் பெற்றுத் தந்துள்ளது.

பேச்சுவார்த்தையில் பிரபா குழு கலந்துகொள்ளாமல் இருப்பதாகக் கூறுவதற்கு பல காரணங்கள் இருந்தன. ஆனால் அவற்றை தவிர்த்து சர்வதேசத்தின் கவனத்திற்கொள்ளப்படாத கிழக்குத் தளபதிகளின் பயத்தைக் காரணங் காட்டியமை பிரபா குழுவின் அரசியல் தொடர்பிலான முதிர்ச்சியின்மையை காட்டுவதாகக் கூறுகின்றனர் அரசியல் ஆய்வாளர்கள்.

இப்போது பேச்சுவார்த்தைகளைக் குழப்புவது,



சமாதானத்தில் நாட்டமில்லாதது பிரபா குழுதான் எனும் கருத்து சர்வதேச சமூகத்தில் ஊன்றிவருகின்றது. அதனால்தான் பிரபா குழுவின் கிழக்குத் தளபதிக்கான பயண ஒழுங்கை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளாமல் பிரபா குழுவுக்கு எதிரான கருத்து சர்வதேசத்தில் வலுப்பெற்றதுடன் தான் தொடர்ந்து விட்டுக்கொடுப்புடன் செயற்படுவதாக காட்ட கடல் விமான வசதி செய்துதர முன்வந்தது அரசு.பிரபா குழுவினர் முக்கியத்துவமற்ற தமது தளபதிகளின் போக்குவரத்தைக் காரணங்காட்டி பேச்சுவார்த்தைக்கு வராமலிருப்பதனால் ஐரோப்பா முழுவதும் பிரபா குழுவை தடைசெய்ய வேண்டும் என்ற பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுள்ளது அரசாங்கம். ஐரோப்பிய யூனியனினும் இதற்கு சாதகமான பதிலையே அளித்துள்ளது.

ஆக இராணுவத் தளபதி மீதான தாக்குதலையடுத்த நிலைமையை அரசு மிகத் திறமையாகக் கையாண்டுள்ளது. சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் பிரபா குழுவுக்கெதிரான யுத்தத்தை முன்னெடுக்க அரசு தயாரான நிலையில் உள்ளது. ஆனால் ஆரம்பிப்பதற்கல்ல.

புரிந்துணர்வு உடன்படிக்கையானது இப்போது வெறும் காகித எழுத்தாக மட்டுமே உள்ளபோதிலும் அதிலிருந்து வெளியேற அரசு தயாராக இல்லை. அரசு புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து விலகுவதற்கான பல சாத்தியமான காரணங்களை பிரபா குழுவின் தாக்குதல்கள் உருவாக்கியுள்ளபோதிலும் தம்மீதான சர்வதேச ஆதரவினையும் அனுதாபத்தையும் இன்னும் உறுதிப்படுத்தவே அரசாங்கம் பொறுமைகாக்கின்றது. அதேசமயம் பிரபா குழுவும் புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து விலகப்போவதில்லை அப்படியானால் இதற்கு முடிவு என்ன. வடகிழக்கில் வன்முறைகள் அதிகரிக்கும்போது கண்காணிப்புக் குழுவினால் செயற்பட முடியாத நிலை தோன்றும் அண்மைக் காலத்திலும் வன்முறைகளும் தாக்குதல்களும் அதிகரிக்கும்போது கண்காணிப்புக் குழுவினர் தமது அலுவலகங்களில் முடங்கிக் கிடந்த அனுபவங்களே உள்ளன.கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுமளவிற்கும், அல்லது பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் அளிக்க முடியாத நிலை ஏற்படும் பட்சத்தில் கண்காணிப்புக் குழுவினர் தமது பணியை இடைநிறுத்துவர். அவ்வாறு தமது பணியை இடைநிறுத்தும் பட்சத்தில் யுத்த நிறுத்த மீறல்களை கண்காணிக்க யாருமில்லாத நிலை ஏற்படும். இந்நிலையில் இருதரப்பினரும் பரஸ்பரம் யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபடலாம்.

இந்நிலை தொடர்ந்தால் கண்காணிப்புப் பணியும் இடைநிறுத்தப்பட்ட நிலையில் புரிந்துணர்வு உடன்படிக்கை தானாகவே காலாவதியாகும் நிலை உருவாகும். இவ்வாறான ஒரு நிலை உருவாகுமானால் அரசாங்கமும் சர்வதேச சமூகமும் இதற்கான காரணங்களை பிரபா குழுவின் மீதே சுமத்தும்.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் அமையுமானால் அரசாங்கம் சர்வதேசத்தின் பூரண ஆதரவுடன் பிரபா குழுவைத் தாக்கும். சர்வதேச சமூகத்தின் ஆதரவும் உதவியும் கிடைப்பதனால் இலகுவில் பிரபா குழு தோற்கடிக்கப்பட்டு அதன் முகவரியே இல்லாமல் போகலாம்.

# பிரபாகரன் நடாத்தி வருவது தனது அதிகாரத்தை தக்கவைப்பதற்கான அதிகாரப் போராட்டமே தவிர மக்கள் போராட்டமல்ல.

**தமிழ் அலையுடனான விசேட பேட்டியில் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் முதன்னிலைப் பொறுப்பாளர் பிள்ளையான் தெரிவிப்பு.**

பிரபாகரன் இப்போது நடாத்திக் கொண்டிருப்பது தனது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்கான அதிகாரப் போராட்டமே தவிர தமிழ் மக்களுக்கான போராட்டமல்ல. இவர்களிடம் தமிழ் மக்களுக்கான எந்தவித கொள்கைத் திட்டங்களும் இல்லை. (09-05-2006) அன்று ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷியை சந்தித்த தமிழ் செல்வன் தலைவர் விரைவில் தீர்க்கமான முடிவெடுப்பார் என்று கூறினார். புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட இந் நான்கு வருடத்துக்கும் இன்னும் ஒரு தெளிவான முடிவில்லாமல் தடுமாறுகின்றார் என்பதேயே இது புலப்படுத்துகின்றது.

கடந்த இரு தினங்களுக்கு முன் அரசாங்கம் ஏ-9 பாதையை மூடியதால் உரிய மருத்துவ சிகிச்சை பெற முடியாமல் குழந்தை யொன்று இறந்தமைக்கு பிரபா குழு நீலிக் கண்ணீர் வடித்தது. ஏ-9 வீதி திறக்கப்பட்ட இது நாள் வரை அப்பகுதியினால் பெருந்தொகையான பணத்தை பிரபா குழு வரியாக அறவிட்டது. இது மட்டுமன்றி அரச சார்பற்ற நிறுவனங்கள், வெளிநாடுகளில் இருந்து பெருந்தொகையான பணத்தைப் பெற்றுள்ளனர். இதனைக் கொண்டு ஒரு குழந்தைக்கு உரிய மருத்துவ வசதி அளிக்கக் கூடிய மருத்துவமனை ஒன்றைக் கூட பிரபா குழு அமைக்கவில்லை. அப்பணத்தை எல்லாம் தமது அதிகாரத்தை தக்க வைப்பதற்கே பயன்படுத்துகின்றனர். இப்போது அவர்கள் ஏ-9 வீதி மூடப்படுவதனால் கவலைப்படுவது அப் பாதையால் கிடைக்கும் நாளாந்த வருமானம் தடைப்படுகின்றதே என்பதனால்தான். உரிய மருத்துவ வசதி அளித்து ஒரு குழந்தையின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. பிறகு என்ன தனியாட்சி? தனியரசாங்கம்? மக்களால் கிடைத்த பணத்தில் அரைவாசியை செலவழித்தால் கூட நவீன வசதி கொண்ட பல வைத்திய சாலைகளை அமைத்திருக்க முடியும். எனவும் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் முதன்னிலைப் பொறுப்பாளர் பிள்ளையான் மேலும் கூறினார். அவருடனான பேட்டியின் முழு விபரம் வருமாறு,

**கேள்வி : ஜெனிவாவில் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு முன் உங்கள் தலைவர் கருணா அம்மான் பிரபா குழுவிற்கு எதிராக யுத்தநிறுத்தமொன்றை அறிவித்திருந்தார். ஆனால் கடந்த இரு வாரங்களில் உங்களின் விசேட தாக்குதல் படையணி பிரபா குழுவின் மூதூர் பகுதியினுள் ஊடுருவி தாக்கி அவர்களுக்கு பெரும் இழப்பையும் சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளனர். யுத்த நிறுத்தம் அறிவித்த நீங்கள் இப்போது திடிரென பிரபா குழுவினர் மீது தாக்குவது ஏன்?**

பதில் : நாங்கள் யுத்த நிறுத்தம் அறிவித்தது பிரபா குழுவினருக்காகல்ல. அவர்கள் அதனை பொருட்படுத்தமாட்டார்கள் என்பதை நாம் நன்கறிவோம். மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் சமாதான செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்க கூடாது என்பதற்காகவும், ஆதரவளிக்கும் முகமாகவுமே நாம் யுத்த நிறுத்தத்தை அறிவித்தோம். ஆனால் அக்காலப் பகுதியில் எமது உறுப்பினர்களோ, ஆதரவாளர்களோ பிரபா குழுவினரால் தாக்கப்பட்டால் நாம் பதில் நடவடிக்கையில் இறங்குவோம் என தெளிவாகவே கூறியிருந்தோம். இக்காலப் பகுதியில் எமது உறுப்பினர்கள் 3 பேர், ஆதரவாளர்கள் 3 பேர் என மொத்தம் 6 பேர் பிரபா குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். கடந்த 30-06-2006 அன்று எமது காந்தாக்காட்டு இராணுவ முகாமையும் தாக்கினார்கள். எனவே நாம் பதிலடி நடவடிக்கையில் இறங்கியுள்ளோம்.

**கேள்வி : அப்படியானால் நீங்கள் அன்று அறிவித்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் இப்போது காலாவதியாகி விட்டதா?**

பதில் : நாங்கள் யுத்த நிறுத்தம் அறிவிக்கும் போதே அதனை ஒரு மாதகாலத்திற்கென்றே அறிவித்திருந்தோம். அதனால் இப்போது அவ் யுத்த நிறுத்தம் காலாவதியாகிவிட்டது.

**கேள்வி : உங்களது காந்தாக்காட்டு இராணுவ முகாமை தாக்கியதன் மூலம் பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளதாக பிரபா குழு பிரச்சாரம் செய்கின்றது. அதில் ஒன்று நீங்கள் இராணுவத்துடன் சேர்ந்தியங்குவது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது என...... இது குறித்து என்ன கூறுகின்றீர்கள்?**

பதில் : எமது காந்காட்டு இராணுவ முகாமானது அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலும் இல்லை. பிரபா குழுவின் கட்டுபாட்டுப் பகுதியிலும் இல்லாமல் சூனியப் பிரதேசத்திலேயே உள்ளது. கட்டுமுறிச்சானில் இருந்து 9 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. உண்மையில் நீங்கள் ஒன்றை விளங்க வேண்டும். நாம் இராணுவத்தினருடன் சேர்ந்து இருந்திருந்தால் ஏன் இராணுவம் அவர்களைத் தாக்காமல் விட்டது. இது வேண்டும் என்றே கட்டிவிட்ட பொய்ப் பிரச்சாரமாகும். எமக்கு இராணுவம் காவல் இல்லை என்றும், நாம் இராணுவத்தினருடன் சேர்ந்தியங்க வில்லை என்பதும் பிரபா குழுவினருக்கு நன்கு தெரியும்.

**கேள்வி காந்தக்காடு இராணுவ முகாமை தாக்கியபின் அவர்கள் கூறும் இன்னொரு குற்றச்சாட்டு நீங்கள் தான் தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்களை கடத்தினீர்கள் என்று. இது பற்றி.......**


பதில் : பிரபா குழுவினர் எமது முகாமில் இருந்த வாகனங்களைக் கொண்டே இவ்வாறான ஒரு குற்றச்சாட்டை முன்வைக்கின்றார்கள். அவர்கள் ஏற்கனவே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒரு வான் கடத்தப்பட்டதாக கூறினார்கள். இப்போது எமது முகாமைத் தாக்கிய பின் இரு வாகனங்கள் கடத்தப்பட்டதாக கூறுகின்றார்கள். இதிலிருந்தே இவர்களின் பொய் புலப்படுகின்றது. ஏற்கனவே நாங்கள் தான் கடத்தினோம் என்று ஒரு பொய்யை கூறி இப்போது அதனை நிருபிக்க இன்னுமொரு பொய்யான தகவலை முன்வைக்கின்றனர்.

**கேள்வி : அண்மையில் ராய்ட்டர் செய்திச் சேவையில் பிரபா குழுவின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் ஜெனிவாப் பேச்சுவார்த்தையில் இணக்கங் காணப்பட்ட துணைப்படையினரின் அயுதக் களைவை அரசு மேற்கொள்ளவில்லை. எனவே அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஊடுருவி குறிப்பாக உங்களது தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளினது ஆயுதங்களைக் களைய நடவடிக்கை எடுக்க எடுக்கவுள்ளதாக கூறியுள்ளாரே. இது பற்றி !**

பதில் : உண்மையில் நாம் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்களுடன் இயஙகவில்லை. நாம் பிரிந்ததில் இருந்து அவர்கள் இவ்வாறாகத்தான் கூறுகின்றார்கள். ஆரம்பத்தில் இது எமது உள்வீட்டுப் பிரச்சினை யாரும் தலையிடத் தேவையில்லை என்றவர்கள் இப்போது எமது ஆயுதங்களைக் களையும்படி அரசிடம் மண்டாடுகின்றார்கள். அவர்களால் முடியுமானால் செய்து பார்க்கட்டும். ஆனால் இது சாத்தியப்படக் கூடிய ஒன்றல்ல என்பது அவர்களுக்கும் தெரியும்.

**கேள்வி : நீங்கள் இப்போது மீனகம் எனும் கிழக்கு மாகாண அரசியல் தலைமைச் செயலகத்தை திறந்து அரசியல் பணிகளை முன்னெடுத்து வருகின்றீர்கள். 2002ம் ஆண்டு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பிறகு பிரபா குழுவும் பல அரசியல் பணிமனைகளை திறந்து அரசியல் செய்வதாக கூறினார்கள். உங்களது இவ்வரசியல் பணிமனையின் செயற்பாடுகளுக்கும் அன்று பிரபா குழு நடாத்திய அரசியல் பணிகளுக்குமிடையேயுள்ள வேறுபாடு பற்றி கூறுங்கள்.**

பதில் : நீங்கள் எதனைக் கொண்டு பிரபா குழுவினர் அரசியல் பணி செய்தார்கள் என்று கூறுகின்றீர்கள் என தெரியவில்லை. அவர்களின் செயற்பாடுகள் எல்லாம் கப்பம் அறவிடலும், ஆட்களைக் கடத்தலும் தான். நாம் எப்போதும் இது இரண்டையும் செய்யப்போவதில்லை. நாங்கள் மக்கள் முன் நடிக்கவில்லை. தமிழ் மக்களுக்காக உணர்வுடன் வேலை செய்யப் புறப்பட்டிருக்கின்றோம். இது ஒரு ஆரம்பமே. விரைவில் நாம் எம்மை



**எமக்கு பிரபாகரன் முக்கியமல்ல. எமது மக்களுக்கு நியாயமான உரிமைகளும், கௌரவமான தீர்வும் கிடைத்து நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதே எமது ஒரே குறிக்கோள்.**

மக்கள் முன் முழுமையாக கொண்டு சென்று மக்களின் உரிமைக்காக, அடிப்படை விடயங்களுக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்.

**கேள்வி : உங்களது மீனகம் அலுவலகமானது உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருப்பதாகவும் அதற்கு படையினர் பாதுகாப்பு வழங்குவதாகவும் கூறுகின்றார்களே!**

பதில் : இலங்கை அரச சட்டப்படி உயிராபத்துள்ள ஒரு அமைப்பை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை. நாளை பிரபாகரன் கூட அரசியலுக்கு வந்து அலுவலகம் திறந்தால் அரச படைகளே பாதுகாப்பு வழங்கும். இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு பாதுகாப்பு வழங்குவது யார்? அரச படைகளே!

**கேள்வி : உங்களது அரசியல் பணிமனை திறந்த பின் மக்கள் மத்தியில் அதற்கான வரவேற்பு, மாற்றம் என்பன எந்தளவு உள்ளது.?**

பதில் : இப்போதுதான் மக்களுக்கு ஒரு நம்பிக்கை வந்துள்ளது. நாங்கள் அவர்களுக்கு அருகில் வந்துவிட்டோம். கைவிடமாட்டோம் என்ற நம்பிக்கை மக்களுக்கு வந்துவிட்டது. இது ஒரு அடிப்படை மாற்றம். இதிலிருந்த நாம் எம் மக்களை உரிய பாதையில் வழி நடத்திச் செல்வோம். மக்களிடமிருந்து எமக்கான வரவேற்பு அபரிமிதமாகவுள்ளது. தினம் பெருமளவிலான மக்கள் எம்மை அணுகுகின்றார்கள். இதனை நீங்கள் அங்கு வந்து நேரடியாகவே காணலாம்.

**கேள்வி : ஓய்வு பெற்றுக் சென்ற கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹெக்லண்ட அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் உங்களது உறுப்பினர்கள் எனக் கூறப்படுபவர்களை ஆயுதங்களுடன் அவதானித்ததாகவும், அவர்களால் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் கூறினாரே. இது குறித்து அவ்வமைப்பை வழி நடத்தும் பொறுப்பாளர் என்ற வகையில் என்ன கூறுகின்றீர்கள்?**

பதில் : அவர் கண்டதாகக் கூறப்படும் ஆயுததாரிகள் எவ்வித இராணுவ சீருடையோ, இலச்சினையோ அணிந்திருக்கவில்லை. சாதாரண உடையில் ஆயுதங்கள் வைத்திருந்ததாகக் கூறினார். இதனைக்கொண்டு எப்படி அவர்கள் எங்களது உறுப்பினர்கள் என கூறமுடியும். பிரபா குழுவினரே திட்டமிட்டு இப்பகுதியில் ஆயுதங்களுடன் வந்து தம்மை எமது அமைப்பின் உறுப்பினர்கள் என்று அறிமுகம் செய்திருக்கலாமல்லவா? இதுதான் நடந்திருக்கும். இப்போது கூட நீங்கள் வாழைச்சேனையில் சில இடங்களுக்கு சென்றால் பிரபா குழுவினரை ஆயுதங்களுடன் நடமாடுவதைக் காணலாம். நாம் எப்பொதும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதங்களுடன் நடமாவில்லை. அதுவும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதகம் ஏற்படுத்தும் வகையில் எப்போதும் செயற்படவில்லை.

**கேள்வி : பிரபா குழுவுக்கெதிரான பல தமிழ் கட்சிகள் உள்ளன. நீங்கள் இவர்களுடன் இணைந்து செயற்படவுள்ளீர்களா? அல்லது தனியாக செயற்படவுள்ளீர்களா?**

பதில் : இதற்கு நாம் பிரிந்தவுடனே அறிக்கை ஒன்று வெளியிட்டோம். பிரபாகரனுக்கு எதிரான அனைத்து கட்சிகளும் ஒன்று சேர்ந்து செற்பட அழைப்பு விடுத்தோம். நீங்கள் ஒன்றை நன்கு உணர வேண்டும். பிரபாகரனுக்கு எதிராக போராடுவது மட்டும் எமது பணியல்ல. பிரபாகரனை ஒழித்த பின் தமிழ் மக்களுக்கான உரிய தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும். எமக்கு பிரபாகரன் முக்கியமல்ல. எமது மக்களுக்கு நியாயமான உரிமைகளும், கௌரவமான தீர்வும் கிடைத்து நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதே எமது ஒரே குறிக்கோள். ஆனால் இதற்கு பிரபாகரன் தடையாகவுள்ளார். இதற்காக நாம் ஒரு பொது வேலைத்திட்டம் முன்வைத்து பிரபாகரனுக்கு எதிரான அனைத்து கட்சிகளையும் இணைத்து செயற்பட தயாராகவுள்ளோம். ஆனால் இவ்வாறு இண்ணந்து செயற்படும் போது அதிகார மோதல்கள் குறுக்கீடு செய்யக்கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் அவரவருக்கான தனித்துவத்துடன் மக்கள் நலனை முன்னிறுத்தி செயற்பட வேண்டும். தமது தனிப்பட்ட அதிகார விருப்புக்காக மக்களை பலி கொடுக்காமல் தமிழ் மக்களின் உரிமைகளுக்கும், நலனுக்கும் முன்னுரிமை கொடுக்கும் கூட்டமைப்புக்கு நாம் எப்போதும் ஆதரவாக இருப்போம்.


**கேள்வி : தமிழ் மக்களின் நியாயமான உரிமைப் போராட்டத்தில் ஆரம்பத்தில் முஸ்லிம் மக்களும் இணைந்திருந்தார்கள். ஆனால் 1990ம் ஆண்டு ஏற்பட்ட பல கசப்பான சம்பவங்களால் முஸ்லிம் மக்கள் ஒதுங்கிக்கொண்டனர். இப்போது கூட தமிழ் மக்களுக்கு தீர்வுகள் கிடைக்கும் போது தாம் புறக்கணிக்கப்படலாம் என்ற அச்சம் பெரும்பாலான முஸ்லிம் மக்களிடத்தில் காணப்படுகின்றது. ஒரு பொறுப்புள்ள மக்கள் இயக்கம் என்ற வகையில் முஸ்லிம் மக்களின் இவ்வச்சத்துக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்.**

பதில் : நாம் முஸ்லிம் மக்கள் தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டில் உள்ளோம். தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒற்றுமையுடனம், சமாதானத்துடனும் வாழ வேண்டும் என்பதிலும் ஒருவரின் உரிமையில் இன்னொருவர் தலையிட முடியாது என்பதிலும் நாம் தெளிவாவுள்ளோம். அதேசமயம் கிழக்கில் சிங்கள மக்களும் வாழ்கின்றனர். நாம் ஏனைய சகோதர இன மக்கள் நம்பிக்கை கொள்ளும் வேலைத் திட்டங்களை முன்வைத்து செயற்படவுள்ளோம். ஒருவரை மிதித்து இன்னொருவர் வாழ முடியாது என்பதை அனைவரும் உணர வேண்டும். கிழக்கில் வாழ்கின்ற மூவின மக்களும்

(09ம் பக்கம் பார்க்க)

# கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலும் முஸ்லிம் கட்சிகளும்

மேன்முறையீட்டுத் தீர்ப்பின் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சிமன்றத் தேர்தல்க்ள் இம்மாதம் மாதம் 20ந் திகதி நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளையும் தேர்தல்கள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. நடைபெறப்போகும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பல கட்சிகளுக்கு ஜீவ மரணப் போராட்டமாகும்.



கொழும்பு மாநகரசபையை தேர்தலை அடுத்து பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசங்களில் முஸ்லிம் மக்கள் செறிவாகவுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள்தான்.

கல்முனை மாநகரசபை, அக்கரைப்பற்று, ஏறாவூர் கோறளைப்பற்று பிரதேச சபை, ஓட்டமாவடிப் பிரதேச சபை போன்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள அதேவேளை இவ்வுள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான பிரச்சாரமும் சூடுபிடித்துள்ளது. இத்தேர்தலானது முஸ்லிம்களின் பிரதான அரசியற் கட்சியான முஸ்லிம் காங்கிரஸுக்கும், முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து அரசுடன் இணைந்திருக்கும் மாற்று அணியினருக்கும், அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸிற்கும், அமைச்சர் பேரியல் அஸ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணிக்கும் இடையிலான பாரிய பலப்பரீட்சையாகவுள்ளது.

ஏற்கனவே மார்ச்மாதம் 30ந் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முஸ்லிம் மக்கள் மத்தியில் அதிகபட்சமான ஆதரவு தமக்கே உண்டு என்பதை முஸ்லிம் காங்கிரஸ் மீண்டுமொருமுறை நிரூபித்தது. சம்மாந்துறையில் அமைச்சர் அஸ்வர் இஸ்மாயிலையும், கிண்ணியாவில் அமைச்சர் நஜீப் ஏ.மஜீத்தையும் தோற்கடித்து அப்பகுதிக்கான உள்ளூராட்சி மன்ற அதிகாரங்களைக் கைப்பற்றியது முஸ்லிம் காங்கிரஸ்.

இப்போது மீண்டும் ஏனைய உள்ளூராட்சி மன்ற அதிகாரங்களைக் கைப்பற்றி தமது பலத்தை பறைசாற்றுவதுடன் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளும் தமது எண்ணங்களுக்கு உரமூட்ட பகீரப் பிரயத்தனம் மேற்கொண்டுள்ளது முஸ்லிம் காங்கிரஸ். மறுமுனையில் முஸ்லிம் காங்கிரஸின் பலத்தை கேள்விக்குறியாக்கி தமது பலத்தைப் பறைசாற்றி தமது செல்வாக்கை நிரூபிக்க முயல்கின்றன ஏனைய முஸ்லிம் கட்சிகள்.
இதில் அமைச்சர் அதாஉல்லாவிற்கு இத் தேர்தல் மிகமுக்கியமானதாகும். ஏனெனில் அவரது தேசியக் காங்கிரஸ் உத்தியோகபூர்வமாக தேர்தல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டு சந்திக்கும் முதல் தேர்தல் இதுவாகும். இதில் தன்னுடைய பலத்தை நிரூபிக்க மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றார் அமைச்சர் அதாஉல்லா.

1983ம் ஆண்டிற்குப் பின் இலங்கை முஸ்லிம்கள் குறிப்பாக வடகிழக்கு முஸ்லிம்களின் பிரதான ஆயுதமாக அரசியற் பலமே இருந்துவருகின்றது. 1989ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாசாவை ஆதரிப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான எம்.எச்.எம்.அஸ்ரப் முன் நிபந்தனையாக முன்வைத்த பொதுத் தேர்தலில் வெட்டுப்புள்ளியை 12.5 வீதத்திலிருந்து 5 வீதமாக குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையே இன்றும்கூட சிறுபான்மைக் கட்சி பாராளுமன்றத்தில் கோலோச்சுவதற்கு காரணமாக அமைந்தது.


1994ம் ஆண்டில் இருந்து 2002ம் ஆண்டுவரை ஆட்சியைத் தீர்மானிக்கும் கிங்மேக்கராக முஸ்லிம் காங்கிரஸ் திகழ்ந்தது. அதன் தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப்பின் மறைவின் பின் முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட ஆரம்பித்தது. இன்றுள்ள அனைத்து முஸ்லிம் கட்சிகளும் எம்.எச்.எம். அஸ்ரப்பின் மறைவின் பின் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிளவுபட்டவைகளே.

வடகிழக்கிலுள்ள முஸ்லிம்கள் தம் உரிமைகளை வென்றெடுப்பதற்கு பிரதான ஆயுதமாகக் கைக்கொண்ட அரசியற் பலம் சிங்களப் பேரினவாத அரசுகளினால சின்னாபின்னமாக்கப்பட்டது. பதவிகளுக்கும், பணங்களுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகள் பேரம் போனதால் முஸ்லிம்களின் அரசியற்பலம் கேள்விக்குறியானது. இவ்வாறான நிலையிலேயே முஸ்லிம் மக்கள் இம்முறை உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்கின்றனர். இன்று வடகிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்கள் பல முக்கியமான அடிப்படைப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். 1990ம் ஆண்டு பிரபாகரனால் திட்மிடப்பட்ட இனப்படுகொலைகளின் பின் இன்று கிழக்கிலுள்ள முஸ்லிம்கள் தமது பாதுகாப்பில் அச்சத்துடனேயே வாழ்ந்துவருகின்றனர். மட்டுமன்றி இனப்பிரச்சினை தொடர்பில் தமது உரிமைகள் பறிக்கப்படுமோ என்ற ஐயம் முஸ்லிம்களிடையே உண்டு.

எனவே முஸ்லிம்களின் அடிப்படைப் பிரச்சினைக்கு உரிய தீர்வுகாண செயற்படவேண்டியது அனைத்து முஸ்லிம் கட்சிகளின் கடமை. ஆனால் இன்று முஸ்லிம்களின் முக்கியமான அடிப்படைப் பிரச்சினைகள் தேர்தல் மேடைகளில் விவாதப் பொருளாக இருக்கின்றதே தவிர இவைகள் குறித்து முஸ்லிம் கட்சிகள் அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை என்ற ஆதங்கம் பெரும்பாலான முஸ்லிம்களிடம் காணப்படுகின்றது.

முஸ்லிம்களின் அதிகளவான ஆதரவைப் பெற்ற கட்சியான கருதப்படும் முஸ்லிம் காங்கிரஸ் கூட தேர்தல்களை தமது எதிரிக்கு பாடம் புகட்டும் களமாக நோக்குகின்றதே தவிர முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் களமாகப் பயன்படுத்துவதில்லை என்ற கருத்து முஸ்லிம்களிடையே உண்டு.

2004ம் ஆண்டில் இருந்து எதிர்கட்சி வரிசையில் இருந்துவரும் முஸ்லிம் காங்கிரஸ் விரைவில் அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பொறுப்பை ஏற்கவுள்ளதாக தெரியவருகின்றது. இதற்குப் பிரதான காரணம் அமைச்சுப் பதவிகளினூடாக முஸ்லிம்களுக்கு அபிவிருத்தியும், உரிமைகளையும் பெற்றுத்தர வேண்டும் என்பதைவிட அரச தரப்பின் பக்கமுள்ள தமது எதிரிகளை மட்டுப்படுத்தவும், தமது கட்சிமீதான வழக்குகளிலிருந்து நிவாரணம் பெறவுமே என்ற கருத்து முஸ்லிம்களிடையே நிலவுகின்றது.



முஸ்லிம் மக்களிடையே தாமே இன்னும் செல்வாக்குள்ள கட்சி என்பதை நிரூபித்துவிட்டு அரசுடன் இணையும் போதுதான் தமக்குரிய மரியாதை கிடைக்குமென முஸ்லிம் காங்கிரஸ் கருதுகின்றது. இதற்கான சிறந்த வாய்ப்பாக உள்ளூராட்சித் தேர்தலை முஸ்லிம் காங்கிரஸ் பயன்படுத்துகின்றது.

இன்றுள்ள அனைத்து முஸ்லிம் கட்சிகளுமே தாம் முஸ்லிம்களின் உரிமைகளுக்காகவே என மார் தட்டுகின்றன. ஆனால் இவை ஏன் பிரிந்து உரிமைகளுக்காக குரல் கொடுக்கவேண்டும். ஓரணியில் நின்றால் முஸ்லிம்களின் அரசியற்பலம் உறுதியாகுமல்லவா?

என்ற நியாயமான ஆதங்கம் முஸ்லிம்களிடையே உண்டு. ஆனால் இதற்கு எம் முஸ்லிம் கட்சியும் உறுதியான பதிலை இதுவரை அளிக்கவில்லை.

ஆக முஸ்லிம் கட்சிகள் தேர்தலில் வெற்றிபெறுவது மட்டும் தமது நோக்காகக் கொள்ளாமல் ஓரணியில் ஒன்றுபட்டு முஸ்லிம்களின் நியாயமான உாிமைகளை முன்னிலைப்படுத்துவதே முஸ்லிம்களின் பிரச்சினைக்கு சிறந்த தீர்வாகும்.

## கோவிலுக்குச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் பிரபா குழுவின் கிளைமோர் தாக்குதலில் பலி.
## திருமலையில் நடந்த கொடூரம்.

01.05.2006அன்று காலை 10மணியளவில் திருமலை சண்முகா வித்தியாலயத்துக்கருகே பிரபா குழுவினர் நடாத்திய கிளைமோர் தாக்குதலுக்கு கோவிலுக்குச் செல்ல வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் பலியாகியுள்ளனர். இச்சம்பவத்தில் கடற்படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் இரண்டு பொதுமக்கள் உட்பட ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

பிரபா குழுவினரால் நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் திருமலை திருஞானசுந்தரம் வீதியைச் சேர்ந்த திருமதி. சித்திரா துரைநாயகம் (வயது46), வனிதா துாைநாயகம் (வயது27), துளசிதாகன் துரைநாயகம் (வயது22), வடிவேல் பிரபாகரன் (வயது31) ஆகியோரே கொல்லப்பட்டராவர். சம்பவ தினம் இவர்கள் முச்சக்கர வண்டி ஒன்றில் கோவிலுக்குச் சென்றபோதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் பொருட்கொள்வனவில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஜெயச்சந்திரன், அப்தூல் ரசாக் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். இதேவேளை சம்பவத்தில் படுகாயமடைந்த கடற்படை வீரர்கள் விசேட ஹெலிகொப்டர் மூலம் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

பிரபா குழுவின் கொடூரத் தாக்குதலையடுத்து திருமலை நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. ஜெனீவா பேச்சுவார்த்தை முடிவடைந்த பின் பிரபா குழுவினரால் இதுவரை 57 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஏறாவூர் பற்றுப் பிரதேச தமிழ் மக்களுக்கு பிரபா குழுவின் 20 நாள் துணைப்படைப் பயிற்சி ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரபா குழுவின் கட்டுப் பாட்டுப் பகுதிகளான ஏறாவூர் பற்றுப் பிரதேசத்துக்குட்பட்ட மயிலவட்டவான், பொத்தானை, ஈரளக்குளம், இலுக்கு, முள்ளிவட்டவான், பெரியவட்டவான் பகுதி மக்களுக்கான 20 நாள் துணைப் படைப் பயிற்சி எதிர்வரும் 20-05-2006 அன்று பிரபா குழுவின் குடாவட்டை முகாமில் ஆரம்பம் என கிழக்கு மக்களை வன்னியில் இருந்து அழிக்க வந்த பாணுவால் அறிவிக்கப்பட்டுள்ளது. . இதனை நிராகரிப்பவர்களின் கால் நடைகள், நெற்காணிகள வீடுகள் பறிமுதலாக்கப்பட்டு விரட்டியடிக்கப்படுவீர்கள் எனவும் பாணு எச்சரித்துள்ளார். ஆனால் குறிப்பிட்ட கிராம மக்களோ பாணுவின் இவ் மிரட்டலை நிராகரித்து வந்தாறுமூலை, சித்தாண்டிப் பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்து வருவதோடு பிரபா குழு மீது கடும் வெறுப்பு கொண்டுள்ளதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர், இதேவேளை மாவடிஓடை கிராம மக்களுக்கான துணைப்படை பயிற்சியும் இதே தினத்தில் பிரபா குழுவின் கரடியனாறு துணைப்படை முகாமில் நடைபெறும் எனவும், இராணுவத்தோடு யுத்தம் புரிவதற்கல்ல கருணா அம்மானின் போராளிகளை கொல்வதற்கே இப் பயிற்சி எனவும் அறிவித்துள்ளனர். பிரபா குழுவினரின் போராட்டம் சகோதரப் படுகொலைகளை மேற்கொள்வதற்காகவே நடாத்தப்படுகின்றது என்பதை மக்கள் மத்தியில் தோலுரித்துக் காட்டியுள்ளது.

# 1990ம் ஆண்டு கிழக்கு இன வன்முறைகள், யாரால்? எதற்காக?

வள்ளுவன்

வட-கிழக்கில் மிக அன்னியோன்னியமாகவும், சகோதர வாஞ்சையுடனும் வாழ்ந்த சகோதர இன மக்களை விரட்டியடித்து கொன்று சகோதர இன உறவுக்கு வரலாற்றில் என்றும் மாறாத கறையை ஏற்படுத்தினார் பிரபாகரன்.

வட மாகாணத்தில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த முஸ்லிம் சகோதரர்களை ஒரு சில மணித்துளிகளில் யாவையும் இழந்த அகதிகளாக வெளியேற்றி வெற்றி கொண்டாடியது புலி பாசிசவாதம். உங்களின் காலிலுள்ள மண்ணைக் கூட தட்டிவிட்டுச் செல்லுங்கள் என்று கூறி தம் இன வக்கிரத்தின் உச்சக்கட்டத்தை வெளிப்படுத்தியது பாசிசம்.

இதைவிட கிழக்கு மாகாணத்தில் ஒன்றுடன் ஒன்று கலந்து உண்டு உறவாடி இன்ப துன்பங்களை பகிர்ந்து வாழ்ந்த தமிழ், முஸ்லிம் உறவைப் பிரித்து முஸ்லிம் சகோதரர்களை கொன்று குவித்த கொடூரம் தமிழ் முஸ்லிம் உறவைப் பிரித்தது. தமிழ் முஸ்லிம் உறவில் தீராத பகையை விதைத்தது. இன்றுங் கூட தமிழர்களின் நேச உறவை சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலைமையை விதைத்தது. 1990ம் ஆண்டு பிரபாகரனின் சதியால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைதான்.

இரவில் ஒரு சில மணித்துளிகளில் பச்சிளம் பாலகர்கள், சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள், இளைஞர்கள் என வேறுபாடு இன்றி வேட்டையாடினர். பிரபாகரனின் கொலைகாரக் கூட்டத்தினர். கிழக்கு மண்ணே இரத்த மயமான, சோக மயமான வரலாற்றுத் துரோகத்திற்கு அன்று புலிகளின் கிழக்குத் தளபதியான கருணா அம்மானும் அவருடைய விசுவாசமிக்க போராளிகளும் ஏன் உடன் பட்டனர், எவ்வாறு அனுமதித்தனர். என்ற சில குரல்கள் இடையிடையே ஒலிப்பதுண்டு.

1990ம் ஆண்டு கிழக்கில் முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிராகவும், எல்லைப்புற சிங்கள இன மக்களுக்கு எதிராகவும் பிரபாகரனால் மேற்கொள்ளப்பட்ட இன படுகொலைகளின் பின்னணி என்ன? யாரினால் எதற்காக இவை மேற்கொள்ளப்பட்டன என்ற மறைக்கப்பட்ட சில உண்மைகளை வெளிப்படுத்துவதே இத் தொடரின் நோக்கம்.

1990ம் ஆண்டின் பிற்பகுதிக் காலமது. பிரேமதாச அரசுடனான தேனிலவை முறித்துக்கொண்டு அரச படையுடனான மோதலை ஆரம்பித்தார் பிரபாகரன். வடகிழக்கில் எங்கும் குண்டின் ஓசையும், விமானத் தாக்குதலும் மலிந்து மரண ஓலங்கள் அதிகரித்த அச்சமயத்தில்தான் அம் மாபெரும் இனப்படுகொலைக்கு திட்டமிட்டனர் பிரபாகரனும் பொட்டனும்.

1990.08.04 திகதி வழமைபோல தம் இரவுநேர இஸாத் தொழுகைக்கான மஸ்ஜித் விரைந்தனர் காத்தான்குடிப் பிரதேச முஸ்லிம் சகோதரர்கள். காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா ஜும்மா பள்ளிவாசலும் ஹுசைனியாத் தைக்காவும் இறைவனை வழிபடுவதற்காக ஏழு வயதுச் சிறுவன் முதல் 63வயதுவரையான முஸ்லிம் சகோதரர்களால் நிரம்பியிருந்தது.

கடிகாரம் தன்முள்ளை 07.49 எனக் காட்ட அனைவரும் இறைவனை வணங்க தம்மை மறந்து தொழுகையில் ஈடுபட்டிருந்த நேரம் ஏற்கனவே வன்னியில் தீட்டப்பட்ட அம்மாபெரும் சதிக்கு உயிரூட்ட பல சகோதரர்களின் உயிரைப் பறிக்க இஸ்லாமியச் சகோதரர்களுக்கான கலாச்சார ஆடையுடன் பள்ளிவாசல் பக்கம் நுளைந்தனர்.

சிலநிமிட நேரத்தில் துப்பாக்கிக் குண்டுகள் முழங்குகின்றன பள்ளிவாசல் எங்கும் மரண ஓலங்கள் ஒலிக்கின்றது. பச்சிளம் பாலகர், சிறுவர், வயோதிபர் வரை 109 சகோதர இன மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. ஒரு சில நிமிடங்களில் பிஞ்சு உயிர்களின் அலறல்களினால் அப் பள்ளிச் சுவர்கள்கூட அழுதன.

அதே நேரம் இன்னொரு கொலைகாரக் கும்பலினால் ஹுசைனியா தைக்காவில் தொழுகையில் ஈடுபட்டிருந்த 87 சகோதரர்கள் கொல்லப்படுகின்றார்கள். முழு முஸ்லிம் சமுதாயத்தின் உணர்வலைகளை கிழறிவிட்ட வரலாறுகள் கூட என்றும் மன்னிக்காத மாபெரும் இனப்படுகொலைகள் புரிந்துவிட்டு வெளியேறிய பாசிசக் கொலைகாரக் கூட்டம் அப்பாவியான முஸ்லிம் சகோதரர்களை வயது வேறுபாடின்றி அதுவும் புனிதமான வணக்கஸ்தலங்களில் கொலை செய்தமையை மனித நாகரீகமுள்ள எச் சமுதாயமும் அங்கீகரிக்காது இவ்வினப்படுகொலைகளால் இஸ்லாமிய சமுதாயம் மட்டுமன்றி பல தமிழ் நெஞ்சங்கள் அழுந்தன.

இம் மாபெரும் சோகத்தின் ஈரம் காய்வதற்கிடையில் ஏற்கனவே திட்டமிட்ட மற்றுமொரு இனப்படுகொலைக்கு தயாரானது பாசிச கொலைகாரக் கூட்டம். 1990.08.12 அன்று ஏறாவூர் மக்கள் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தனர். தாம் பாசிசத்தின் கொலை வெறிக்கு இரையாகப் போவதை அறியாமல். ஏக காலத்தில் ஏறாவூர் பிரதேசத்திலுள்ள சதாம் ஹுசைன் கிராமம், மீரா நகர், மிச்ச நகர், ஐயங்கேணி, சிறட்டையன் குடா, கம்மியன்குடா, ஓராங்கட்டை போன்ற பகுதியிலுள்ள 129 முஸ்லிம் சகோதரர்கள் பால் வயது வேறுபாடின்றி தூக்கத்தில் இருந்தவர்கள் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டனர்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும், அதேசமயம் எல்லைப்புற சிங்கள மக்கள்மீதும் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனப் படுகொலைகளின் பின்னணியில் பிரபாகரனினதும், பொட்டனினதும் கொடூர முகமொன்று மறைந்திருந்தது.

கிழக்கு மாகாணத்தில் படுகொலைகள் திட்டமிட்ட சமயம் அதுபற்றி அப்போது கிழக்குத் தளபதியாகவிருந்த கருணா அம்மானுக்கு அறிவிக்கப்படவில்லை. அதே நேரம் இப்படுகொலைகளுக்கு கருணா அம்மான் தடையாகவிருக்கலாம் என்பதனால் உடனடி ஆலோசனைக்காக யாழ்ப்பாணம் வரும்படி அழைக்கப்பட்டிருந்தார் இனப்படுகொலைகளை வழிநடாத்தும் பொறுப்பு கரிகாலனிடம் வழங்கப்பட்டதுடன் இக் கொடூரத்தை அரங்கேற்றவென பொட்டனின் கீழ் நேரடியாக பயிற்றுவிக்கப்பட்ட பல புலனாய்வு உறுப்பினர்கள் கிழக்கிற்கு அனுப்பப்பட்டனர்.

1990ம் ஆண்டு வடகிழக்கில் படையினரைத்தாக்கி 3ம்கட்ட ஈழப்போரை பிரபாகரனால் பிரகடனப்படுத்தப்பட்டபோது யாழ் குடாநாட்டைக் கைப்பற்ற இலங்கை இராணுவத்தால் திட்மொன்று வகுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் தமது முழு வலுவைப் பிரயோகித்து மாபெரும் இராணுவ நடவடிக்கையொன்றை ஆரம்பித்து

**இனிவரும் காலங்களிலும் தமிழ் முஸ்லிம் சகோதர இன உறவை வலுப்படுத்தி எமது மண்ணில் பூரண அமைதியையும் இஸ்திரத் தன்மையையும் உருவாக்க தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் உறுதிபூண்டு அதற்காக எப்போதும் பரந்த மனப்பாங்குடன் செயற்பட முஸ்லிம் சகோதரர்களுக்கு அழைப்பு விடுக்கின்றனர்**

அதன்மூலம் குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கான சில திட்டங்களும் தயாரானது. இவ்விராணுவ நடவடிக்கைக்கான முன்னாயத்தங்களில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்ட சமயம் இவ் விராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டால் தமக்கு பாரியளவான இழப்பும், யாழ் குடாவும் கையைவிட்டுப் போய்விடுமென்ற அச்சம் பிரபாகரனுக்கு எழுந்தது.

இக்காலப்பகுதியில் கிழக்கில் மாபெரும் இனப் படுகொலை ஒன்றை மேற்கொண்டால் இராணுவத் தலைமையின் கவனம் சிதறும் அதே சமயம் கிழக்கில் பாதுகாப்பை பலப்டுத்தவும் முஸ்லிம் சிங்கள மக்களைப் பாதுகாக்க பெருமளவான இராணுவத்தை அனுப்பவேண்டி ஏற்படும் இதனால் திட்டமிட்டபடி யாழ் குடாநாட்டை கைப்பற்றுவதற்கான இராணுவ நடவடிக்கையை முன்னெடுக்க முடியாமல் போகும் என்பதற்காக பிரபாகரனினாலும், பொட்டனினாலும் திட்டமிடப்பட்டதே இச் சகோதர இனப்படுகொலைகள்.

ஆனாலும் அன்று கிழக்குத் தளபதி எனும் பொறுப்புவகித்த கருணா அம்மான் இப்படுகொலைகள் குறித்து பாராமுகமாக இருக்கவில்லை. ஆனாலும் எவ்வாறாயினும் அன்று கிழக்குத் தளபதி எனும் பதவிவகித்தமையினால இவ்வாறான படுகொலைகள் தொடர்பில் சகோதர இன மக்களிடம் மனம்வருந்தியமையும், எதிர்காலத்தில் இவ்வாறான கொடூரங்கள் இனியும் இடம்பெறாமல் கைகோர்த்து செயற்பட இஸ்லாமிய சகோதரர்களுக்கு அழைப்பு விடுத்தமையும் இங்கு நினைவுகூரத்தக்கது. அதே சமயம் அன்று இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்கு தலைமைவகித்த கரிகாலனை யர்ழ் குடாநாட்டிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்படவேண்டும் என்ற தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் பீடம் தீர்மானம் மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. எது எவ்வாறாயினும் இழப்புக்கள் ஈடுசெய்யமுடியாது. பாதிக்கப்பட்ட அச்சகோதர இன மக்களின் உயிர்களுக்கு எவ்வாறான வார்த்தைகளும் ஈடாகாது என்பதை நாம் நன்கறிவோம். அதே சமயம் கிழக்கு மண்ணில் இனியும் இனிவரும் காலங்களிலும் தமிழ் முஸ்லிம் சகோதர இன உறவை வலுப்படுத்தி எமக்குள் புரிந்துணர்வையும விட்டுக்கொடுப்பையும் வளப்படுத்தி எமது மண்ணில் பூரண அமைதியையும் இஸ்திரத் தன்மையையும் உருவாக்க தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் உறுதிபூண்டு அதற்காக எப்போதும் பரந்த மனப்பாங்குடன் செயற்பட முஸ்லிம் சகோதரர்களுக்கு அழைப்பு விடுக்கின்றனர்.

## பிரபா குழுவினர் ஏமாற்றுவது அரசாங்கத்தை அல்ல, சமாதானத்தில் நம்பிக்கை கொண்ட தமிழ் மக்களையே



பிரபா குழுவினர் ஏமாற்றுவது அரசாங்கத்தை அல்ல, மாறாக சமாதானத்தில் நம்பிக்கை கொண்ட தமிழ் மக்களையே என அரசாங்க சமாதான செயலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று சமாதானத்தின் தேவை அதிகளவு உணரப்படுவது வட-கிழக்கில் தான். மிகவும் பின் தங்கிக் காணப்படும் அப் பகுதியில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கும், சமூக நலத் திட்டங்களை மேன்படுத்தவும் அரசாங்கமும், சர்வதேச சமூகமும் தயாராகவே உள்ளன. ஆனால் அதற்கு பிரபா குழுவின் ஆயுதங்களும், அவர்களது பயங்கரவாத செயற்பாடுகளும் மிகப்பெரும் தடையாக உள்ள இந்நிலையில் சமாதானம் மலர வேண்டும் என்ற நம்பிக்கையிலுள்ள தமிழ் மக்களை பிரபா குழுவினர் ஏமாற்றி வருகின்றனர்.

வட-கிழக்கு மக்களின் வாழ்க்கையை மேன்படுத்த பிரதான தடை பிரபா குழுதான் என்பதையும் மக்கள் நன்கு உணரவேண்டும் என்பதும் அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுதந்திரக் கிழக்கு நோக்கி....

தொடர்02

இந்த கிழக்கு கடலை அண்டிய பிரதேசங்களான நெய்தல் நிலம் எழுவான்கரை ஆகவும் மேற்கு மலையடிவாரங்களில் அமைந்துள்ள நெல் வயல்கள் நிரம்பிய மருதநிலம் படுவான்கரையாகவும் சூரியன் எழுவதையும் படுவதையும் கொண்டமைந்த காரணப்பெயர் பெற்றன. மட்டகளப்பில் அமைந்துள்ள சுமார் 45கி.மீ நீளமான நீண்டதொரு வாவியே இந்த எழுவான் கரையையும் படுவான்கரையையும் இயற்கையாக பிரித்து நிற்பதில் முக்கிய பங்கெடுக்கின்றது. இங்குதான் மீன்கள் பாடும் அதிசயம் நிகழ்வதாக ஐதீகம்.

ஆ) சமூக பொருளாதார வாழ்வியல் நோக்கு எழுவான் கரையைப் பொறுத்தவரை திருமலையிலிருந்து தெற்குநோக்கி செல்லும் பிரதான வீதி மூதூர், வெருகல், வாழைச்சேனை, ஏறாவூர், மட்டக்களப்பு, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, கல்முனை, அக்கரைப்பற்று, திருக்கோயில் போன்ற பட்டினங்களை ஊடறுத்து பாணமை, பொத்துவில், குமணை வரை நீண்டு செல்கிறது. இதன் காரணமாக ஓரளவு நவீன உலகுடன் தொடர்புடையதாக இந்த எழுவான்கரை காணப்படுகிறது. கல்லூரிகள் பஸ்நிலையங்கள், தபால் அலுவலகங்கள், வைத்தியசாலைகள், வங்கிகள், மற்றும் நீதிமன்றங்கள், பொலிஸ் நிலையங்கள் போன்றவையும் இப்பகுதிகளில் அதிகம் காணப்படுகிறது. மக்கள்தொகை பரம்பலிலும் செறிவான கிராமங்களை இந்த எழுவான்கரையே கொண்டுள்ளது. மேற்படி நாளாந்த வாழ்க்கைக்கான அடிப்படை வசதிகளை கொண்டமைந்தவையால் உயர்கல்வி வாய்ப்புகளிலும் இப்பகுதியே முக்கியத்துவமுடையதாயுள்ளது. இதன் காரணமாக அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவற்றில் கிடைக்கும் உத்தியோகங்களிலும் இந்த எழுவாங்கரை பிரசைகளே அதிகம் இடம்பெற்று வருகின்றனர். நீண்ட கடலையும் அதையொட்டிய மணல் மண்தரையையும் இயற்கை வளங்களாக கொண்டமைந்ததால் பொருளாதார வருமானத்தைப் பொறுத்தவரை கடல் மீன்பிடியும் தென்னை, மரமுந்திரிகை, காய்கறித் தோட்டங்களும் அதுசார்ந்த வணிகமும் அதிகளவில் இப்பகுதி மக்களின் தொழில்களாக உள்ளன. இதுதவிர திருகோணமலையில் அமைந்துள்ள இயற்கைத் துறைமுகம் சார்ந்த தொழில் வாய்ப்புகளும் பொருளாதார ரீதியாக

கிழக்கிலங்கைக்கு மிக முக்கியமாதொன்றாகும். எழுவான்கரை பிரதேசத்தின் அதிக பகுதிகள் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசமாக யுத்த காலங்களில் இனங்காணப்பட்டிருந்தது . படுவான்கரையை பொறுத்தவரை பிரமாண்டமான நெல், தானிய விளைநிலங்களை கொண்டுள்ளது. அகன்று விரிந்த பிரமாண்டமான நிலப்பரப்பை கொண்டது இப்பிரதேசம். சனத்தொகைப் பரம்பல் மிக குறைவானதாகக் காணப்படுகிறது. இன்றுவரை நவீன வசதிகள் எதனையும் பெற்றுக்கொள்ள வாய்ப்பின்றி பிற்படுத்தப்பட்ட பகுதிகளாகவே உள்ளன. ஏழை, உழைக்கும் மக்கள் வாழும் நிலங்கள் கொண்டமைந்த படுவான்கரை வயற்பரப்புகளில் அதிகமானவை போடிமார் என்றழைக்கப்படும் நிலபிரபுக்கள் வசமே உள்ளன. பெரும்பட்டிகள் என்றழைக்கப்படும் கால் நடை வளர்ப்புகளினதும் உரித்துடையவர்களாக இப்போடிமாரே காணப்படுகின்றனர். இந்த வண்டல் மண்ணின் புதல்வர்களான ஏழை விவசாயிகளின் குழந்தைகள்தான் 1990ற்கு பின் தமிழீழ விடுதலை புலிகளின் ஆளணி தொகுதிகளை நிரப்பி வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு பிளவுக்கு முன்னர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகள் இந்த படுவான்கரை பகுதியேயாகும். முன்னொரு காலத்தில் வன்னிமைகளாகவும் குறுநில பிரதானிகளின் . அரசிருக்கைகளாகவும் செயற்பட்ட பழம்பெரும் ராசதானிகள் சர்வசாதாரண கிராமங்களாக இந்த படுவாங்கரையிலேயே உறங்கிக் கிடக்கின்றன. அவ்வகையில் போரதீவு, வீரமுனை, பழுகாமம், மண்முனை என்பன ஒருகாலத்தில் அரசோற்றிய இடங்களாகும். தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த பின்னர் கிழக்கு பிளவுவரையான காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிக்ளின் அலுவலகங்கள் கொக்கட்டிசோலை பழுகாமம் போன்ற இடங்களிலும் கரடியனாறு குடும்பிமலை பகுதிகளையொட்டி தேனகம், மீனகம் என்கின்ற பென்னம்பெரிய பயிற்சி முகாம்களும் இந்த படுவான்கரை பகுதிகளிலேயே இருந்தன.

(தொடரும்...........)

## திருக்கோவிலில் பிரபா குழுவின் கிளேமோர் தாக்குதலை அடுத்து கோபமடைந்த அதிரடிப் படையினர் மக்கள் மீது தாக்குதல்.

திருக்கோவில் - தம்பிலுவில் பிரதான வீதியில் கடந்த 17-05-2006 புதன் கிழமை அன்று பிரபா குழு விசேட அதிரடிப் படையினரை இலக்கு வைத்து நடாத்திய கிளைமோர் தாக்குதலில் படுகாயத்துக்குள்ளான அதிரடிப் படை வீரர் ஒருவர் அம்பாறை அரச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லபபட்ட போது இடை வழியில் உயிரிழந்தார்.

சம்பவ தினம் காலை 8.15 மணியளவில் சன நெருக்கம் நிறைந்த பிரதான வீயிலுள்ள மேகலா திரையரங்கிற்கு அருகில் பிரபா குழுவால் இத் தாக்குதல் நன்கு திட்டுமிட்டு நடாத்தப்பட்டது என்று கூறும் அப்பிரதேச பெரியவர் ஒருவர் அதிரடிப் படையினர் தாக்கப்பட்டால் அப்பாவியான இப் பிரதேச மக்களே அதிரடிப்படையினரின் பதில் தாக்குதலுக்கு உள்ளாகிப் பாதிக்கப்படுவார்கள என்றும், பாதிக்கப்படும் மக்கள் பிரபா குழுவோடு இணைவார்கள் என்பதுமே பிரபா குழுவின் இன்றைய இராஜதந்திரங்கள் என்று அப் பெரியவர் மேலும் தெரிவித்தார்

எது எவ்வாறோ, பிரபா குழு வேறு மக்கள் வேறு. எனவே பிரபா குழுவின் தாக்குதலுக்காக அப்பாவியான பொது மக்களை அதிரடிப் படையினர் தாக்குவது மாபெரும் தவறு என்று கூறும் திருக்கோவில் பிரதேசத்தின் மற்றுமொரு இளைஞர் இத் தாக்குதலுக்குக் காரணமான பிரபா குழுவையே இராணுவத்தினர் தாக்கி அழிக்க வேண்டும் மக்களை அல்ல என்று கோபத்துடன் தனது உணர்வினை வெளிப்படுத்தினார்.

## பிரபா குழு ஒரு ஆயுதக் குழுதான் என்பதை ஏற்றுக் கொண்டது கண்காணிப்புக் குழு

பிரபா குழுவானது ஒரு சாதாரண ஆயுதக் குழுதான் என்பதை கண்காணிப்புக் குழு ஏற்றுக் கொண்டுள்ளது. அண்மையில் வெற்றிலைக் கேணிக கடற் பரப்பில் கடற்படையினரை வலிந்து பிரபா குழு தாக்கியதை கண்டித்து கண்காணிப்புக் குழு விடுத்துள்ள அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஆயுதக் குழுவுக்கு நாட்டின் கடல் எல்லையில் உரிமை கிடையாது எனவும் நாட்டின் முழுக் கடல் உரிமையும் அரசாங்கத்துக்கே உரியது எனவும் கூறும் கண்காணிப்புக் குழு சாதாரண ஆயுதக் குழுவான பிரபா குழு நாட்டின் கடல் எல்லையில் உரிமை கோர முடியாது எனவும் கண்டித்துள்ளது.

கண்காணிப்புக் குழு பிரபா குழுவை ஆயுதக் குழு உன வர்ணித்ததை பிரபா குழுவின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் கண்டிப்பதாகவும், கண்காணிப்புக் குழு தலைவருக்கு விளக்கமின்மையே இதற்கு காரணம் எனவும் சாடி கண்காணிப்புக் குழு தனது அறிக்கையை மாற்றி மீண்டும் வெளியிட வேண்டும் எனக் கோரினார். ஆனால் அக் கோரிக்கையை கண்காணிப்புக் குழவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் நிராகரித்துள்ளார். வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் நடந்த தாக்குதலானது புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஏற்பட்ட அபகீர்த்தி எனக் கூறியுள்ள கண்காணிப்புக் குழு பிரபா குழுவினர் தாம் இஷ்டப்பட்டபடி அதனை மீறி வந்துள்ளனர் எனவும் குற்றம் சாட்டியது.

## தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் போராளி வீர மரணம்

காத்தான்குடி பிரதேசத்தில் கடந்த 13-05-2006 அன்று தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் போராளியொருவர் வீரமரணமடைந்துள்ளார். 2ம் லெப்டினன் விகடன் என்றழைக்கப்படும் நாகராசா சந்திரகுமார் (வயுது 19) என்ற போராளியே இம் மண்ணினதும், மக்களினதும் சர்வதிகார அடிமைத் தனத்தில் இருந்து விடுதலை எனும் உயர் மிகு இலட்சியங்களைச் சுமந்து துரோகியினால் வீர மரணத்தைத் தழுவிய வீரனாவார். எம் போராளி இம் மண்ணை விட்டு மறைந்தாலும் எம்மை விட்டு மறைவதில்லை. நாம் அவர்களின் உயர் மிகு இலட்சியங்களை, கொள்கைகளைச் சுமந்து துரோகிகளை துரத்த உறுதி பூண்டுள்துளோம்.

## வெற்றிலைக்கேணி தாக்குதலையடுத்து பிரபா குழுவுக்கெதிராக இராணுவ ரீதியிலும், இராஜதந்திர ரீதியிலும் பதிலடி கொடுக்க அரசு திட்டம்

வடமராட்ச்சிக்கு கிழக்கே வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் திருமலை துறைமுகத்திலிருந்து காங்கேசந்துறைக்கு துருப்புக்களை கொண்டு சென்ற பேர்ன் குறூஸ் துருப்புக்காவிக் கப்பலையும் அதற்கு பாதுகாப்பு வழங்கிய டோராப் படகுகளையும் பிரபா குழுவின் கடற்கலங்கள் தாக்கியதையடுத்து இதற்கெதிராக மிகப் பாரிய இராணுவ நடவடிக்கைக்காக சாத்தியங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாதுகாப்பு உயரதிகாரிகளுடனும், ஆலோசகர்களுடனும் ஆராய்ந்து வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இத்தாக்குதல் தொடர்பில் கண்காணிப்புக் குழுவும் பிரபா குழுவை கடுமையான முறையில் குற்றம் சாட்டியுள்ளதனால் இதனைக் கொண்டு இணைத்தலைமை நாடுகள் இந்தியா, ஐரோப்பிய யூனியன் போன்ற சர்வதேச சத்திகளிடம் பிரபா குழுவின் பயங்கரவாதத் தாக்குதலையும், அவர்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையை அப்பட்டமாக மீறியிருப்பதையும் சுட்டிக்காட்டி பிரபா குழுவுக்கெதிரான இராஜதந்திர நடவடிக்கையிலும் ஈடுபடவும் அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

(05ம் பக்கத் தொடர்ச்சி)
ஒற்றுமையுடனும், புரிந்துணர்வுடனும் வாழ வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். நிரந்தர சமாதானம் மலரும் போது அது அனைத்து இன மக்களினதும் உரிமைகளையும், அபிலாசைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வின் மூலமே நிரந்தர சமாதானத்தை நோக்கி நகர முடியும். இதில் எமது தலைமைப் பீடம் தெளிவாகவுள்ளது. நாம் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுத்திட்டம் முன்வைக்கும் போது அதில் அனைத்து இன மக்களினதும் நியாயமான உரிமைகள் உள்ளடக்கப்பட்டிருக்கும். இன்று இனப்பிரச்சினை சிக்கலாகியதற்கு பிரதான காரணம் முஸ்லிம் மக்களின் பல நியாயமான அபிலாசைகளை நிராகரித்திருந்தமையும்தான். தனது தனிப்பட்ட அதிகார வெறிக்காக 1990ம் ஆண்டு முஸ்லிம் மக்களுக்கு எதிராக பிரபாகரன் மேற்கொண்ட இனப்படுகொலைகள் இனி தமிழ்--முஸ்லிம் மக்கள் வரலாற்றில் எப்பொழுதும் இடம் பெறக்கூடாது என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம்.

**கேள்வி: அண்மைக் காலமாக கிழக்கு மாகாணத்தில் உங்களது அமைப்பின் கடிதத் தலைப்பை பயன்படுத்தியும், உங்களது பெயரைப் பயன்படுத்தியும் நிதி தருமாறு மிரட்டுவதாகவும், அரச சார்பற்ற நிறுவனங்களில் வேலை செய்வோர் விலக வேண்டும் என்றும் எச்சரிக்கை விடுத்திருப்பதாகவும் கூறப்படுகின்றதே?**

பதில் : இவ்வாறான எச் செயற்பாட்டிலும் நாம் ஈடுபடவில்லை. கொள்ளையடிக்கும் யாரும் கடிதத்தலைப்பை பயன்படுத்தியோ, பெயரைப் பயன்படுத்தியோ செய்வதில்லை. பிரபா குழுவினர் செய்த தவறுகளை நாம் எக்காரணம் கொண்டும் எப்போதும் செய்யப் போவதில்லை. இது பிரபா குழுவின் திட்டமிட்ட சதிதான். உங்களுக்கு இரண்டு உதாரணங்கள் சொல்லலாம் என நினைக்கின்றேன். அண்மையில் மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த ஒருவருக்கு எனது பெயரைப் பயன்படுத்தி பணம் அனுப்பும்படி மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதில் வங்கியின் பெயரும், வங்கிக் கணக்கு இலக்கமும் கொடுக்கப்பட்டிருந்தது. இது குறித்து எமக்கு அறிவிக்கப்பட்டவுடன் நாம் உடனே வங்கிக் கணக்கு குறித்து ஆராய்ந்த போது இது பிரபா குழுவினரின் வங்கிக் கணக்கு என்பது தெரியவந்தது.

கல்முனையில் இன்னுமொருவருக்கு எமது கடிதத் தலைப்பை பயன்படுத்தி அலுவலகம் ஒன்று திறக்க இடம் தருமாறும், இல்லையேல் 5 இலட்சம் பணம் தருமாறு கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அக்கடிதத்தின் இறுதியில் எனது பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. இது குறித்து விசாரித்த போது அது பிரபா குழுவின் சதியென்று தெரியவந்தது. நாம் ஆயுதம் வைத்திருப்பது பிரபா குழுவினரிடமிருந்து எம்மையும், மக்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கே. இவ்வாயுதத்தைக் கொண்டு நாம் எப்போதும் எம் மக்களுக்கு இடையூறு விளைவிக்க மாட்டோம். இச்சதி வேலையில் பிரபா குழுவினரும், வேறு சில தனி நபர்களும் ஈடுபடுவதாக நாம் நம்புகின்றோம்.

அரச சார்பற்ற நிறுவனங்களில் வேலை செய்வோரை விலகும் படி மிரட்ட எமது அமைப்பின் கடிதத் தலைப்பு பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இது குறித்து அண்மையில் **care** சர்வதேச தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளை எமது பிரதிநிதிகள் மீனகம் அலுவலகத்தில் சந்தித்து விளக்கமளித்துள்ளனர்.

அதே சமயம் சர்வதேச தொண்டர் நிறுனங்களில் வேலை செய்வோரும் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். எமது கலாச்சாரம் பண்பாட்டிற்கு எப்போதும் இடையூறு விளைவிக்காமல் எமது பாரம்பரிய பண்பாட்டை சீர்படுத்தும் வகையில் தமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்வதில் உறுதியாக இருக்க வேண்டும்.

**கேள்வி : பிரபா குழுவினர் மீதான பிரதான குற்றச்சாட்டுக்களில் ஒன்று சிறுவர்கள் பலாத்கார கடத்தல். ஆனால் அண்மையில் ஜெனிவாவில் தமிழ் செல்வன் சிறுவர்களை கடத்துவது தொடர்பாக உங்கள் இயக்கத்தின் மீது குற்றம் சாட்டியுள்ளார். இது குறித்து...**

பதில் : எமது தலைவர் தம்மிடமிருந்த 6000 போராளிகளையே வீடுகளுக்கு அனுப்பியவர். நாம் ஒருபோதும் பலாத்கார ஆட்சேர்ப்பில் ஈடுபடுவது இல்லை. பிரபா குழுவினரால் எங்களுக்கெதிராக பல பத்திரிகையாளர் மாநாடு நடாத்தப்பட்டது. அதில் எம்மீது இவ்வாறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தினர். ஆனால் அப்பத்திரிகையாளர் மாநாடு எவ்வாறு ஒழுங்கு செய்யப்பட்டது என்பது பற்றி அனைவருக்கும் தெரியும். எமது இயக்கத்தில் சுய விருப்பத்தின் பேரில் வரும் இளைஞர்கள் மாத்திரமே இணைத்துக் கொள்ளப்படுகின்றார்கள். அண்மையில் கூட உயர்தரப் பரிட்சை எழுதவுள்ள இரு மாணவர்கள் எம்மிடம் இணைய வந்தனர். ஆனால் நாம் அவர்களிடம் பரிட்சை எழுதும்படி கூறி அறிவுறுத்தி அனுப்பி விட்டோம்.

**கேள்வி : அண்மைக் காலமாக வட~கிழக்கு மண்ணில் மனிதக் கொலைகள் அதிகரித்துள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் முற்றாக பாதிப்படைந்து அச்சமான சூழ் நிலையிலேயே மக்கள் வாழ்ந்து வருகின்றனர். நீங்கள் பிரிந்ததைத் தொடர்ந்தே இக் கொலைகள் அதிகரித்துள்ளன என்ற கருத்து பொதுவாக கூறப்படுகின்றது. இது பற்றி என்ன கூறுகின்றீர்கள்...**

பதில் : இதற்கு முழுக்க முழுக்க பிரபா குழுதான் காரணம். அவர்கள் உருவாக்கிய மக்கள் படையாலேயே கொலைகள் அதிகரித்துள்ளன. இம் மக்கள்படை எங்கிருந்து உருவாக்கப்படுகின்றது என்றால் பிரபா குழுவுக்கு விசுவாசமான ஆசிரியர்களால் உயர் தர மாணவர்களை சுற்றுலா எனும் போர்வையில் கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட, அங்கு பிரபா குழுவினரால் 9 நாள் பயிற்சி வழங்கப்படுகின்றது. கிளைமோர், கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளுவது போன்ற பயிற்சிகள் வழங்குகின்றார்கள். இவர்களாலேயே பொது இடங்களில் தாக்குதல்கள் இடம் பெறுகின்றன. இம் மக்கள் படையானது கிழக்கில் 10 வீதமும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட பகுதியில் 90 வீதமும் உள்ளது. இம் மாவர்களின் பெற்றோர்கள் தான் பாவம். பெற்றோர்கள் தம் பிள்ளைகளை படிப்பதற்காக பாடசாலை அனுப்ப பிரபா குழுவினரோ அவர்களை தமது பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி அம் மாணவர்களின் எதிர்காலத்தை பாழ்படுத்துவதுடன், அவர்களை கொலைக்களம் அனுப்புகின்றனர். இன்னும் சிலரை பணத்தால் விலைக்கு வாங்கி தாக்குதல் நடாத்துகின்றார்களா. இம் மக்கள் படையினால் நடாத்தப்படும் தாக்குதல்களினாலேயே கொலைகள் அதிகரித்துள்ளன.

அடுத்து இன்னும் ஒன்றை விளங்க வேண்டும். அண்மையில் திருமலையில் விக்கினேஸ்வரன் கொல்லப்பட்ட பிறகே தாக்குதல்கள், கொலைகள் அதிகரித்துள்ளன. பிரபா குழுவினருக்கு ஆதரவானவர்கள் கொல்லப்பட பதில் கொலைகள் அதிகரிப்பதும், இராணுவத் தளபதியின் மீதான தாக்குதலை அடுத்து தமிழ், முஸ்லிம் மக்கள் மீது குண்டு விசுவதும் கண்டிக்கப்பட வேண்டியதே. இதுமட்டுமன்றி கிழக்கில் பல அப்பாவியான இளைஞர்களை எமது அமைப்பின் ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தில் பிரபா குழுவினர் சுட்டுக்கொன்றுள்ளனர். உண்மையில் இவ்விளைஞர்களுக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இருந்ததில்லை.

பிரபா குழு மக்களை, அரச அலுவலர்களை எல்லாம் அழைத்து கட்டாய ஆயுதப் பயிற்சி வழங்குகின்றார்கள். உண்மையில் பிரபா குழு யுத்தம் புரிவதாக இருந்தால் பயிற்சியளித்த மக்களை எல்லாம் தமது உறுப்பினர்களாக அறிவித்துவிட்டு யுத்தத்தை ஆரம்பிக்கட்டும் பார்க்கலாம். அவ்வாறு யுத்தப் பிரகடனப்படுத்தினால் மிஞ்சப்போவது பிரபா குழுவின் தலைவர்களின் பிள்ளைகள் மட்டும் தான். ஏனெனில் அவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் படிப்பதனால். தமிழ் மக்களே பிரபா குழுவை அழிப்பார்கள். இப்போது வன்னியிலுள்ள மக்கள் பிரபாகரனின் திறந்த வெளிச் சிறையிலே உள்ளனர்.

எமது மக்களை பாதுகாக்கின்றோம் என பிரபா குழு கூறுவது தமிழ் மக்களையல்ல. மாறாக தமது பிள்ளைகளையே. அதனால்தான் தங்களது பிள்ளைகளைப் பாதுகாப்பாக வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளனர்.
வட-கிழக்கு தமிழ் மக்கள் என்பதெல்லாம் போய் பிரபாகரன் இப்போது நடாத்திக் கொண்டிருப்பது தான் உயிர் வாழும் வரை அதிகாரத்துடன் இருப்பதற்கான அதிகாரப் போராட்டமே.

**கேள்வி : உங்கள் தலைவர் கருணா அம்மான் தன்னிடமிருந்த 6000 போராளிகளை வீடுகளுக்கனுப்பி அவர்களின் உயிர்களைப் பாதுகாத்தார் எனப் போற்றப்படுகின்றது. ஆனால் இதுவரை போராடியதில் கிட்டத்தட்ட 6000 கிழக்குப் போராளிகள் மரணமடைந்துள்ளனர். இம்முடிவை அவர் ஏற்கனவே எடுத்திருந்தால் அவ்விளைஞர்களின் உயிர்களைப் பாதுகாத்திருக்கலாமல்லவா?**

பதில் : உண்மையில் எங்கள் தலைவர் கருணா அம்மான் 6000 போராளிகளின் உயிர்களைக் காப்பாற்றியதையிட்டு நாம் பெருமை அடைகின்றோம். இச்சந்தர்ப்பத்திலேயாவது அவர் இம் முடிவை எடுத்திருக்காவிட்டால் எம்மிடமிருந்த 6000 போராளிகளையும் தனது பாதுகாப்புக்கு என்று பிரபாகரன் வன்னிக்கு அழைத்து கொல்லக் கொடுத்திருப்பார. இச்சந்தர்ப்பத்திலாவது இம் முடிவை எம் தலைவர் எடுத்தமை குறித்து கிழக்கு மக்கள் என்றென்றும் நன்றி கூறுவர்.

## கனடாவில் பிரபா குழுவுக்கு ஆதரவான 200 இளைஞர்கள் நாடு கடத்த படுகின்றார்கள்.

கனடாவில் பிரபா குழுவுக்கு ஆதரவாக நிதி வசூலிப்பு, கப்பம் வாங்குதல் போன்றவற்றில் ஈடுபட்டு அடையாளம் காணப்பட்ட 200 இளைஞர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளதாக கனேடிய முன்னணி செய்தி பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கனடாவில் புதிதாக பதவியேற்றுள்ள கன்சர் வேட்டிவ் அரசாங்கம் பிரபா குழுவை பயங்கரவாத இயக்கமாக தடைசெய்ததோடு, அதற்கெதிரான நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது. பிரபா குழுவுக்கு ஆதரவான முகவர் அமைப்புக்கள், மக்கள் குழுக்கள் போன்றவற்றை முற்றுகையிட்ட கனேடிய புலனாய்வுத் துறையினர் பிரபா குழுவுக்கு ஆதரவாக கனடாவில் செயற்பட்டு வந்த இளைஞர்களின் பெயரை சேகரித்துள்ளதாக தெரியவருகின்றது. இதையடுத்தே இவ்விளைஞர்களை கைது செய்து நாடு கடத்தும் பணியில் கனேடிய குடிவரவு, குடியகழ்வு திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

அதே சமயம் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து பிரபா குழுவுக்கு ஆதரவாக செயற்பட்ட இளைஞர்களும், வன்முறையில் ஈடுபட்ட இளைஞர்களும் இலங்கைக்கு நாடு கடத்தப் படுவதாக கட்டுநாயக்க விமான நிலைய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணம் நெல்லியடியில் 07 இளைஞர்கள் பலி இராணுவம் மீது தாக்குதல் நடாத்திவிட்டுத தப்பிச் சென்ற பிரபா குழு மீது பதில்தாக்குதல் நடாத்தப்பட்டதாகக் கூறுகின்றார் இராணுவப் பேச்சாளர்.

05.05.2006அன்று பிற்பகல் 02.15 மணியளவில் யாழ்ப்பாணம் நெல்லியடி நவின்டில் பகுதியில் இரு ஓட்டோக்களில் பயணித்த ஏழு இளைஞர்கள் தாக்குதல் சம்பவமொன்றில் மரணமாகியுள்ளனர். இப் பகுதியிலுள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கருகில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட படையினர் மீது நண்பகல் 02.30 மணியளவில் கைகுண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இதில் இரண்டு படையினர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது. இதேவேளை சில நிமிடங்களில் அப்பகுதியில் ஓட்டோக்களில் வந்த இளைஞர்களே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். இது குறித்து கருத்துத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க இராணுவம் மீது தாக்குதல் நடாத்திவிட்டுத தப்பிச் சென்ற பிரபா குழு மீது பதில்தாக்குதல் நடாத்தப்பட்டது என்றார். கொல்லப்பட்ட ஏழு இளைஞர்களும் கரவெட்டி ராஜ கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என இனங்காணப்பட்டுள்ளனர். இவர்கள் நவரட்ணம் நாசன்னா (வயது19) பாலச்சந்திரன் கிரிதரன் (வயது18) நாகரெட்ணம் நகுலேஸ்வரன் (வயது18) தாமோதரம்பிள்ளை மஞ்சு, செல்வராஜா சுமண் (வயது21) கோகிலம்மான் சின்னமணி (வயது21) மணியம் சுபாஸ் (வயது21) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து இப்பகுதியில பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த பருத்தித்து துறை நீதவான் கே. அரியநாயகம் மரணவிசாரணை நடாத்தியதுடன் மருத்துவ பரிசோதனையின் பின் சடலங்களை உறவினர்களிடம் கையளிக்குமாறும் உத்தரவிட்டார்.

## மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மீது தாக்குதல்.
## போராளி வீர மரணம்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் போராளியின்மீது பிரபா குழுவினர் மேற்கொண்ட கோழைத்தனமான தாக்குதலில் போராளி ஒருவர் வீர வித்தானதுடன் இன்னெரு போராளி காயமடைந்துள்ளார். இச்சம்பவம் 15.05.2006 அன்று பிற்பகல் 04.40 மணியளவில் இடம்பெற்றது. பிரபா குழுவின் இம் மிலேச்சத்தனமான தாக்குதலில் இரண்டாம் லெப்டினன் சினேகன் என்ற கீதபொன்கலன் செல்வக்குமார் எனும் போராளி வீர மரணம் அடைந்தவராவார்.

காந்தாக் காடு முகாம் தாக்குதலின்போது காயமடைந்த தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் போராளிகள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர். யுத்த தர்மத்தின்படியும், மனிதஉரிமை சாசனத்தின் பிரகாரம் வைத்தியசாலையில் தாக்குதல் நடாத்துவதும் காயமடைந்தவர்களை தாக்குவதும் மாபெரும் யுத்தக் குற்றமும், மனித குலத்திற்கெதிரான கொடுமையுமாகும். யுத்த குற்றங்களில் தம்மை வளர்த்துக்கொண்ட பிரபா குழுவினர் இத்தாக்குதல் மூலம் தமது கோழைத்தனத்தையும், அநாகரீகமான ஈனச் செயலையும் செயற்படுத்தியுள்ளனர்.

தூக்கத்தில் கொல்லுதல், உணவில் விஷம் வைத்துக் கொல்லுதல், உடனிருந்து கொல்லுதல் போன்ற கோழைத்தனமான முறையில் தம் வீரத்தைப் பறைசாற்றிய பிரபா குழு எமது வீரம் மிக்க போராளிகளை நேருக்கு நேர் சமர்க்களத்தில் எதிர்க்கத் துணிவில்லாமல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும்போது தாக்கி மீண்டுமொருமுறை தம் கோழைத்தனத்தைப் பறைசாற்றியுள்ளனர்.

துரோகங்களும் கோழைத்தனங்களும் நிலைப்பதில்லை. இத் துரோகிகள் எம் வீர மறவர்களினால் விரட்டப்பட்டு சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் பாலம் மிகத் தொலைவிலில்லை. வீரமரணமடைந்த எம் போராளிகளுக்கு என்றென்றும் எம் வீர வணக்கங்கள்.

# கிழக்கு மக்களின் சிந்தனைக்கு!

எஸ். பிரசாந்தி

தமிழர் விடுதலைப் போராட்டம் உக்கிரம் பெற்ற 1983ம் ஆண்டு காலப் பகுதிக்கு முன்பே கிழக்கில் அரசியல் தலைவர்கள் சுயமாக செயல்பட்டு எமது கிழக்கு மண்ணை அபிவிருத்தி செய்தனர். இந்த வரிசையில் அமரர் திரு. சி. நல்லையா, அமரர். ராஜன் செல்வநாயகம் போன்றவர்களின் காலம் கிழக்கு மண்ணின் பொற்காலமாகும். இவர்களின் காலத்திலேயே மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு அடித்தளம் இடப்பட்டது. வாழைச்சேனை காகித ஆலை நிர்மாணிப்பும், தற்போதைய கிழக்குப் பல்கலைக்கழகம் அமைந்திருக்கும் வந்தாறுமூலை மத்திய மஹா வித்தியாலயமும் குறிப்பிடத்தக்கவை. அதேபோன்று அம்பாறை மாவட்டமும் பிரதமர் டீ.எஸ். சேனநாயக்கா அவர்களால் கொண்டுவரப்பட்ட விவசாய அபிவிருத்தி திட்டத்தின் மூலம் பயனடைந்தது. இதன் மூலம் சிங்கள மக்கள் பயனடைந்தாலும் குறிப்பிடத்தக்களவு தமிழ் தொழிலாளர்களும் கிங்குறாங்கொடை சீனித் தொழிற்சாலை மூலம் வேலை வாய்ப்பினைப் பெற்றனர். காரணம் அன்று மூவின மக்களிடையே ஒரு புரிந்துணர்வு காணப்பட்டது.

எமது கிழக்கு மண்ணைப் பொறுத்தவரை போதிய நீர்வளமும், நிலவளமும் ஒருங்கே காணப்பட்டதால் எதனையும் போராடிப் பெற வேண்டிய சூழ்நிலை கிழக்கு மக்களுக்கு ஏற்பட்டதேயில்லை. அவர்கள் தாமுண்டு, தமது வாழ்வுண்டு என்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தனர். காணிகள் மூன்று போகமும் நெல்லைச் சொரிந்தன. பசுக்களும், எருமைகளும் பாலைச் சொரிந்தன. இவை மக்களுக்கு நிறை உணவாக அமைந்தது. மக்கள் அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்தனர். தமிழரின் பாரம்பரிய கலை கலாச்சார,வீர விழுமியங்களை சித்தரித்துக கூறும் தமிழ் புராணக் கதைகளை நாட்டுக் கூத்துக்களாகத் தயாரித்து ஆடி மகிழ்ந்தனர். எழுவான்கரைப் பிரதேசத்தில் சந்திவெளி, சித்தாண்டி, வந்தாறுமூலை, களுதாவளை, களுவாஞ்சிக்குடி, தேத்தாத்தீவு, மாங்காடு, செட்டிபாளையம், போன்ற கிராமங்களும், படுவான்கரைப் பிரதேசத்தில் கன்னங்குடா, கொக்கட்டிச்சோலை, போன்ற பிரதேசங்களும் நாட்டுக்கூத்துக் கலையில் முன்னோடியாக இருந்தன. ஆலயத் திருவிழாக்கள் விமர்சையாக நடைபெற்றது. கொகட்டிச் சோலையில் தான்தோன்றீஸ்வரராக வீற்றிருந்து சிவபெருமானும், கிரான், வந்தாறுமூலை, களுவாஞ்சிக்குடியில் மஹாவிஷ்ணுவும், சித்தாண்டி, திருக்கோவில், தாந்தாமலை, வெருகல், உகந்தையில் முருகப்பெருமானும், கோராவெளியில் தொடங்கும் கண்ணகி வழிபாடு வந்தாறுமூலை, சித்தாண்டி, மட்டக்களப்பு, மகுளூர், எருவில், முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, மண்முனை, வீரமுரனை, கல்லாறு, தம்பிலுவில் போன்ற கிராமங்களில் சிறப்பாக நடந்தது.

மழையில்லாத காலங்களில் இக் கிராமங்களில் பாரம்பரிய விளையாட்டான கொம்பு விளையாட்டும் நடைபெற்றன. அத்தோடு மட்டக்களப்புக்கு பெருமை சேர்க்கும் வகையில் அமிர்தகழியில் ஸ்ரீ ராமரால் பிரதிஸ்டை செய்து வழிபட்ட மாமாங்க ஈஸ்வரர் மாமாங்கப்பிள்ளையாராகவும், நகரின் நடுவே ஆனைப்பந்தி விநாயகரும், களுதாவளைப் பிள்ளையாரும் அருள்மழை பொழிய இந்து மக்கள் சிறப்புடன் வாழ்ந்துகொண்டிருந்தனர். ஆனால் கல்வித் துறை பின்னடைவாகக் காணப்பட்டது. இராம கிருஷ்ண மிஷன், கத்தோலிக்க மிஷன், மெதடிஸ்த மிஷன். போன்ற அமைப்புக்களின் செயற்பாட்டினால் சிவானந்தா வித்தியாலயம், ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலையும் ஏனைய இடங்களில் சிறிய பாடசாலைகளும் நிறுவப்பட்டன. இப் பாடசாலைகளை நிர்வகிப்பதில் பெரிதும் பங்காற்றியவர் காரைதீவு கிராமம் ஈன்றெடுத்த தவப்புதல்வர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அடிகள். அன்னாருடைய கலை இலக்கியப் பணிகள் தமிழ் உலகைப் பெருமைப்படுத்தி கிழக்கு மண்ணின் சிறப்பை மேலும் உயர்த்தியது. மட்டக்களப்பின் கல்வி அபிவிருத்தியில் பெரும் பங்கு கிறிஸ்தவர்களுக்கும் உண்டு என்றால் அதுமிகையாகாது. அருட்தந்தையர்களான வனால் அடிகளாரும், மரியான் அடிகளாரும், கேவியர் அடிகளாரும், வெவர் அடிகளாரும் முன்னோடிகளாவர். மட்டக்களப்பு புனித மிக்கல் கல்லூரி, புனித சிசிலியா பெண்கள் கல்லூரி ஆகியவற்றை நிர்மானித்து கல்வியை வளர்த்தனர். இவர்களில் அருட்தந்தை கேவியர் அவர்கள் தனது வாகனத்தில் 1990ம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் மக்களை ஏற்றிச் சென்ற போது ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பு எல்லைப் பகுதியில் வைத்து படுகொலை செய்யப்பட்டவா. அமெரிக்காவில் பிறந்த இவர்கள் எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காக தமது உடல், பொருள், ஆவிகளை அர்ப்பணித்து இருந்தனர். சமயப் பணி செய்ய மட்டு நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தேவாலயங்கள் அத்துடன் கிராமங்களில் கிறிஸ்தவ ஆலயங்களும் இயேசு பெருமானின் அருளைப் பொழிந்து தொண்டுகள் செய்கின்றன..

மட்டக்களப்பில் மஹாஜன கல்லூரி, வின்சன்ட் பெண்கள் உயர்தரக் கல்லூரி, மெதடிஸ்த மத்திய கல்லூரி என்பன கிறிஸ்தவ மிஷநெறிகளால் அமைக்கப்பட்டன. இவற்றோடு மட்டு இந்துக் கல்லூரியும், வந்தாறுமூலை மத்திய மஹா வித்தியாலயமும் அப்போதிருந்தே எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு அத்திவாரமிட்டன. இவற்றில் வந்தாறுமூலை மத்திய மஹா வித்தியாலயம் எமது மண்ணினதும் மக்களினதும் கல்வித்துறையின் இன்றியமையாத தேவைக்கேற்ப இடைநடுவில் கிழக்குப் பல்கலைக்கழகமாக பரிணாமித்தது. அதுமட்டுமன்றி இன்று மருத்துவப் பீடம் ஆரம்பித்து இருப்பது எமது மக்களுக்கு கிடைத்த மிகப்பெரும் வரப்பிரசாதமே.

இவற்றை விட இஸ்லாமிய நண்பர்கள் அப்போதைய காலகட்டத்தில் வியாபாரத்திலும், விவசாயத்திலும் ஈடுபட்டு எமது பிரதேசத்தை பொருளாதார துறையில் வளப்படுத்தினர். அத்தோடு பெரும்பான்மை இன சிங்கள வர்த்தகர்களும் எமது பிரதேசத்தில் வாழ்ந்ததோடு சகோதர இன உறவுகளும் மிக நெருக்கமாக வலுவடைந்து காணப்பட்டது. கிழக்கின் அன்றைய அரசியல் களத்தில் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து இருந்த k.w. தெய்வநாயகம், பரித் மீராலெவ்வை போன்றவர்களால் கிழக்குப் பிரதேசம் அபிவிருத்தி செய்யப்பட்டது. இவர்கள் கால்த்திலேயே செங்கலடியில் அரச துறை நிர்வாகக் கட்டடங்களும், வைத்தியசாலையும் நிறுவப்பட்டதோடு, வந்தாறுமூலையில் கிழக்குப் பல்கலைக்கழகமும் உருவாக்கப்பட்டது. அதுமட்டுமன்றி பல்லாயிரக் கணக்கான விவசாயிகளின் நன்மை கருதி கிரான்புல் அணைக்கட்டு அமைக்கப்பட்டு அதன் வேலையை அப்போதைய மகாவலி அமைச்சராக இருந்த காமினி திசாநாயக்கா அவர்களை அங்கு நேரடியாக அழைத்துச் சென்று ஆரம்பித்து வைத்தனர். உறுகாமம், கித்துள் இணைப்பு அணைக்கட்டுத் திட்டமும் உருவாக்கப்பட்டது.

அக் காலகட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்த தவப்புதல்வன், சொல்லின் செல்வன் ரே. இராசதுரை அவர்கள் கூட்டணித் தலைமையுடன் முரண்பட்டு தனியாகப் பிரிந்து இந்துக் கலாச்சார அமைச்சராகி சைவத்திற்கும், தமிழுக்கும் தொண்டு செய்தார். அவருடைய காலத்தில் ஸ்ரீ ராமரால் மாத்திரம் செய்யப்பட்ட அஸ்வமேத யாகம் கொழும்பில் நடைபெற்றது. இவற்றை நோக்கும் போது தனித்துவமான தலைவர்களை எமது கிழக்கு மண் பெற்றிருந்தமையை எடுத்துக்காட்டுகின்றது. இவற்றை விட தற்போதைய காலத்தில் வாழ்ந்து மடிந்த முஸ்லிம் தலைவர் மர்கும் அஸ்ரப் அவர்கள் இலங்கை வாழ் முஸ்லிம் மக்களின் விடிவெள்ளியாகத் திகழ்ந்தார். இவரின் வரவால் முஸ்லிம்களின் அரசியலில் புதிய அத்தியாயம் பிறந்தது. அம்பாறை மாவட்டம் உட்பட அனைத்து முஸ்லிம்-தமிழ் பிரதேசங்களும் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியைக் கண்டன. இதில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உதயம் குறிப்பிடத்தக்கது, மேற்குறிப்பிட்ட அரசியல் தலைவர்களால் வழி நடத்தப்பட்ட மட்டு-அம்பாறை பிரதேசத்தின் தற்போதைய நிலைக்கு காரணமானவர்களை எமது மக்கள் நன்றாக இனம்காண வேண்டும். சிங்களவர்கள் எப்போதும் எமது மக்களின் அபிவிருத்திக்கு பெரியளவிலான தடையாக இருந்ததில்லை. ஆனால் பிரதேசவாத வெறிபிடித்த பிரபா குழுவினரே எம்மவரை அடிமையாக்கிப் பார்த்ததோடு ஈழ போராட்டத்தில் அவர்கள் உயர் பதவிகளில் இருந்து கொண்டு எம்மவர்கள் உயர் பதவிகளைப் பெறவிடாமல் தடுத்ததோடு தமது ஆக்கிரமிப்பு மனப்பாங்குகளையும் வெளிப்படுத்தினர்.

தமிழ் பேரினவாதம் கொண்ட பிரபாகரனின் ஆக்கிரமிப்பு படை இப்போது மட்-அம்பாறை மாவட்டங்களின் சில பிதேசங்களை ஆக்கிரமித்து எம் மக்களை துணைப்படையாக்கி கொலைக் களம் அனுப்ப தயாராகிவருகின்றனர். பிரபாகனின் ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டு தவிக்கும் மக்கள் எப்போது விடுதலை கிடைக்கும் என்று நிமிடத்துக்கு நிமிடம் பெருமூச்சு விடுகின்றார்கள். பிரபாகரனின் கடந்கால ஆக்கிரமிப்பில் எம் மக்களுக்கு செய்த துரோகங்களை மீள ஆராந்து பார்க்கும் போது 1983ம் ஆண்டு காலப் பகுதியில் பொட்டுவின் தலைமையில் கிழக்கு பகுதிக்கு வந்த கொலைப் படையே முதன் முதலாக நாகபடை, கழுகுப்படை என்ற பெயர்களில் கிழக்கின் தலைவர்களை அழித்தது. இன்றும் அழித்துக் கொண்டிருக்கின்றது. அப்போது பொட்டுவின் தலைமையில் வந்த குழுவினர் கிழக்கு மாகாணத்தின் தனவந்தர்களை சூறையாடினர். கப்பம் கட்டுவதற்காக எமது மக்கள் தமது நில வளங்களைக் கூட விற்று பொட்டுவிற்கு வரி செலுத்தினர். எம் மக்கள் பொட்டுவால் ஏழைகளாகப்பட்டனர். விவசாயத் துறையையும் திட்டமிட்டு சீரழிக்கும் நோக்கத்தோடு ஏறாவூர் பற்றுப் பிரதேச மக்களுக்கு பெரிதும் பயன்படும் கித்துள், உறுகாமம், கிரான்புல் ஆகிய நீரேந்து அணைக் கட்டுத் திட்டங்களை தடைவிதித்து இன்று வரை இப் பகுதி விவசாயிகளை ஏழைகளாக்கிய பெருமை பொட்டரையே சாரும்.

இவற்றை விட மட்-அம்பாறை மாவட்டத்தின் பல்லாயிரக்கணக்கான மக்களின் ஜீவனோபாயத்துக்கு மூலாதாரமாய் இருந்த முறக்கொட்டான்சேனை அரிசி ஆலை, வந்தாறுமூலை சங்கர்மில் மற்றும் நெசவுத் தொழிற்சாலை, கொம்மாதுறை உமாமில், கரடியனாற்றில் விவசாயப்பண்ணை, அம்பாறையில் சவளக்கடை நெல்குற்றும் ஆலை போன்ற கிழக்கின் பொருளாதார வளங்களை இடித்தழித்து அதில் வேலை செய்த தொழிலாளிகளின் குடும்பங்களை நடுத்தெருவுக்கு கொண்டு வந்த பெருமையும், தொழிற்சாலையின் பெறுமதி மிக்க பொருட்களை சூறையாடி அபகரித்தமையும் பொட்டரையே சாரும். கிழக்கு மக்களே இம் மண்ணுக்கு பிரபா குழு செய்த வரலாற்றுத் துரோகங்களை மீழ் பார்வை செய்து நீங்கள் சிந்திக்கும் தருணம் வந்து விட்டது. என்றென்றும் கிழக்கின் பொருளாதாரத்தை சுரண்டி எடுத்து அப் பணத்தின மூலம் தங்கள் பிள்ளைகள் வெளிநாடுகளில் கல்வி பயின்றுவர, உங்கள் பிள்ளைகள் கல்வி கற்க வளமின்றி வீதியோரங்களில் நின்று பெருமூச்விட, வன்னியில் சொகுசாக இருந்து கொண்டு உங்களை ஆக்கிரமித்து, அடிமையாக்கி, துணைப்படையாக்கி கொலைக்களத்துக்கு அனுப்ப உத்தரவிடும் பிரபாகரனின் தலைமை வேண்டுமா? அல்லது பிரபாகரன் செய்த தவறுகளை உணர்ந்து அவற்றுக்கெதிராக போராடி கிழக்கு மண்ணையும், மக்களையும் பிரபாகரனின் ஆக்கிரமிப்புப் பிடியில் இருந்து மீட்டு மறுக்கப்பட்ட உங்களின் உரிமைகளை அரசோடு பேச்சு நடாத்தி ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணவும், நீங்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு போராடிவரும் கருணா அம்மான் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு வேண்டுமா? என்பதை சிந்தித்துப் பாருங்கள்.



பிரபாகரன் தமிழீழம் உருவாக்க ஆரம்பித்த போராட்டம் இடைநடுவில் திசைமாறி, தடம்புரண்டு கிழக்கு மாகாண மக்களை அடிமைப்படுத்தி, அழித்து, ஆக்கிரமிக்கத் தொடங்கியது. ஈழ விடுதலைப் போராட்டம் ஆரம்பித்ததில் இருந்து இன்று வரை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு பிரபா குழுவின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டு தடைக்கல்லாகவே இருந்தார், இன்றும் இருந்துகொண்டேயுள்ளார். இருந்தும் கிழகது மக்களின் விடுதலைக்காக போராடிவரும் கருணா அம்மான் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் இராணுவ, அரசியல், புலனாய்வுச் செயற்பாடுகள் கிழக்கில் தீவிரமடைந்துள்ளதால் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கு தடையாகவிருந்த பொட்டுவின் தலையீடுகள் ஆட்டம் கண்டு வருகின்றது. இந் நிலையிலேயே தற்போது மருத்துவப் பீடம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இது பிரபா குழுவின் அதிகாரம் செயலிழந்து தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் பலம் வலுவடைந்துவருவதைக் கீறிட்டுக் காட்டுவதோடு மருத்துவப் பீடத்தின் உதயம் இன்று பல தீய சக்திகளின் தடைகளைத் தகர்த்தெறிந்த பின்பே ஆரம்பிக்க இணக்கம் காணப்பட்டது என்பதை எமது பகுதி மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

கிழக்கு மக்களை மாத்திரமல்ல வடக்கு மக்களின் இடம் பெயர்வுகளுக்கும் காரணமானவர்கள் இவர்களே. இவர்களிடம் விசுவாசம் இருந்திருந்தால் வடபகுதி தமிழ் மக்கள் ஏன் நாட்டை விட்டு இலட்சக்கணக்கில் வெளியேற வேண்டும். இவர்கள் செய்த தன்னினக் கொலைகளால் வடபகுதித் தமிழர்களில் அரைவாசிப் பேர் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இப்பேர் பெற்ற பாசிச ஆக்கிரமிப்புக் கொண்ட பிரபாகரனின் தலைமையினை நிராகரித்து கருணா அம்மான் எடுத்த தீர்மானம் மிகவும் தீர்க்க தரிசனமானதே. இல்லாவிட்டால் தற்போது உதயமான தலைமையையும், கிழக்கு மக்களையும் இழக்க வேண்டி ஏற்பட்டிருக்கும் அல்லது அடிமைகளாக வாழ வேண்டியிருந்திருக்கும் எதிர்காலத்தில் வளம் மிக்க கிழக்கு மண்ணை அபிவிருத்தி செய்ய முற்போக்கு சிந்தனையுடைய கருணா அம்மான் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பை பலப்படுத்துவோம்.

## ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகளுக்கு எதிராக அதிகரிக்கும் பிரபா குழுவின் அச்சுறுத்தல்கள்

ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகளுக்கு எதிராக பிரபா குழுவினர் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். தமிழ் ஊடகவியலாளர்கள் அரச சார்பான ஊடகங்களில் இருந்து வெளியேற வேண்டும் எனவும் இல்லாவிட்டால் மரண தண்டனை அழிக்கப்படும் எனவும் பிரபா குழு இராவணன் படை எனும் பெயரில் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

ஊடக சுதந்திரத்துக்கு எதிராக பிரபா குழுவினரால் தொடர்ச்சியாக பிறப்பிக்கும் அச்சுறுத்தலை ஊடக அமைப்பு வன்மையாக கண்டிக்கின்றன. பிரபாகரனால் இதற்கு முன்பும் பல ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டமையையும் சுட்டிக்காட்டி ஊடக சுதந்திரத்துக்கு பிரபா குழு விடுத்து வரும் அச்சுறுத்தலானது மாபெரும் ஜனநாயக விரோத நடவடிக்கை என கண்டிக்கும் ஊடக அமைப்புக்கள் இதற்கு எதிராக தேசிய, சவர்வதேச மட்டத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், ஊடக சேவைத் தொழிற்சங்கம், முஸ்லிம் மீடியா போரம், சுதந்திர ஊடக இயக்கம் என்பன கூட்டாக இவ்வறிக்கையை வெளியிட்டுள்ளன.

இதேபோன்று தமிழ் புத்திஜீவிகள் பலருக்கும் பிரபா குழுவினர் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். பிரபா குழுவின் பயங்கரவாத செயற்பாடுகளையும், ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும் கண்டிக்கும் புத்திஜீகளுக்கே பிரபா குழுவினர் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். பிரபா குழுவின் கொலை அச்சுறுத்தல் காரணமாக யாழ்பல்கலைக்கழக உபவேந்தரான பேராசிரியர் ஜீவரெட்ணம் கூல் அண்மையில் தனது குடும்பத்தினருடன் வெளிநாடொன்றுக்கு சென்றுள்ளார். இதற்கு முன்பும் பிரபா குழுவினரால் பல கல்விமான்களும், புத்திஜீவிகளும் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# எரிகின்றது ஈராக்

எழுதுவது உத்தமன்



இன்றைய திகதியில் உலகில் வன்முறைகள் மிகுந்த நாடாகவும், உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லாத நாடாகவும் ஈராக் திகழ்கின்றது. முதல் மனித நாகரீகமான மொசப்பத்தேமியா நாகரீகம் பிறந்த யூப்பிரட்டீஸ் நதிக்கரையைக் கொண்டுள்ள ஈராக் மனித சமுதாயத்தின் எழுச்சிக்கு வித்திட்ட நாடு.

சுமார் இரு தசாப்தத்திற்கு முன்னர் உலகிலுள்ள செல்வந்த நாடுகளில் ஒன்றாகவும், பிரதான எண்ணெய் ஏற்றுமதியாளராகவும் திகழ்ந்த ஈராக் இன்று சின்னாபின்னப்பட்டிருக்கின்றது. தினமும் மாறிமாறி வெடிகுண்டுகளும், கார்க்குண்டுகளும் வெடித்து ஈராக் எரிந்து கொண்டிருக்கின்றது. சர்வதேச மன்னிப்புச் சபையின் கருத்துப்படி ஈராக்கில் நாளாந்தம் சுமார் 22 பேர் மரணிக்கின்றனர். ஈராக்கில் வாழும் இரு முக்கிய சமுதாயங்கள் முட்டி மோதுகின்றன. வணக்கஸ்தலங்கள் தாக்கப்படுகின்றன. எங்கும் வெடிகுண்டின் ஓசையும், மரண ஓலங்களுமே ஈராக்கில் நிரம்பியுள்ளன. ஈராக் எரிவதற்கு என்ன காரணம்?

ஒரு வரியில் கூறுவதானால் ஈராக்கை ஆண்ட சர்வாதிகார ஆட்சியும், முதலாளித்துவத்தின் மேலாதிக்கமுமே ஈராக் எரிவதற்கான பிரதான காரணமாகும்.

ஈராக்கை கடந்த 36 ஆண்டுகளாக ஆண்ட சதாம் ஹுசைனின் அடக்குமுறையான சர்வாதிகார ஆட்சியில் ஈராக் ஒரு இரும்புத்திரை நாடாகவே விளங்கியது. மத, ஊடக, ஜனநாயகச் சுதந்திரங்கள் மட்டுப்படுத்தப்பட்டு சதாமின் காலடியில் ஈராக் கட்டுண்டு கிடந்தது. பெரும் எண்ணெய் வளம் கொழிக்கும் ஈராக்கில் எல்லாச் செல்வங்களும் சதாமின் குடும்பத்தினராலும், பாத் கட்சியினாலும் சுரண்டப்பட்டது. சதாமின் ஆட்சிக்கு எதிராகப் பேசினால் நாக்கு வெட்டப்படும். திருடினால் விரல்கள் துண்டிக்கப்படும். சதாமிற்கு எதிராகப் பேசினால் ஆளே இல்லை எனும் நிலைதான் ஈராக்கில் காணப்பட்டது.

மத்திய கிழக்கு இஸ்லாமிய நாடுகளில் வலுவான இராணுவத்தினரைக் கொண்டிருந்த சதாம் ஏனைய இஸ்லாமிய நாடுகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக விளங்கினார். மாத்திரமன்றி அன்று ஈராக் அமெரிக்காவின் செல்லப்பிள்ளை என்பது இங்கு கோடிட்டுக் காட்டப்பட வேண்டிய விடயம்.

1980-1988 வரை ஈரான் இஸ்லாமியக் குடியரசுடன் ஈராக் நடாத்திய யுத்தத்தில் ஈராக்கிற்கு பின்பலமாக இருந்தது அமெரிக்காதான். ஆனாலும் அமெரிக்கா தனக்கு ஆதரவளிப்பது மத்திய கிழக்கில் தன்னை நிலைநிறுத்தவும், இங்கு எரிபொருள் வளத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவுமே எனும் உண்மையை சதாம் புரிந்துகொண்டார். இதனால் அமெரிக்காவின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு மத்திய கிழக்கில் அமெரிக்காவிற்கெதிரான சக்தியாக தன்னை இனங்காட்டிக் கொண்டார் சதாம்ஹுசைன்.

மட்டுமன்றி ஈராக்கின் இராணுவ வளர்ச்சி இஸ்ரேலுக்கும், தனது நலனுக்கும் பாரிய ஆபத்து என்பதை அமெரிக்கா உணர்ந்துகொண்டது. எனவே ஈராக்கைத் தட்டிவைக்க தருணம் பார்த்திருந்தது அமெரிக்கா. அதற்கான ஒரு பொன்னான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார் சதாம் ஹுசைன் 1990ம் ஆண்டு. தமக்கு அண்மையிலிருந்து செல்வம் செழிக்கும் குவைட்டை ஆக்கிரமித்து தனது 18வது மாநிலமாக பிரகடனப்படுத்தினார் சதாம்.

சவூதி அரேபியாவும், குவைட்டும் தம்மைப் பாதுகாக்கும்படி அமெரிக்காவிடம் வேண்ட தனது நேச நாடுகளை அழைத்துக்கொண்டு கிடைத்த தருணத்தை மிகச் சரியாகப் பயன்படுத்தி ஈராக்கைத் துவம்சம் செய்தார் சீனியர் புஷ். பல ஆயிரம் வீரர்களை இழந்து பெரும் இழப்புகளைச் சந்தித்து உலக அரங்கில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டது ஈராக். ஆனால இதில் வேதனை என்னவென்றால் அமெரிக்கா தலைமையிலான உலக நாடுகள் சதாம் ஹுசைனைத் தண்டிப்பதாகக் கூறி தண்டித்தது ஈராக் மக்களையே. ஈராக் குவைட்டை ஆக்கிரமித்ததை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. ஆனால் இரண்டாம் உலகப் போரின் பின் அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல் போன்ற நாடுகளும் ஆக்கிரமிப்பு யுத்தங்களை நடாத்தியுள்ளன. ஆனால் யாரும் இந்நாட்டு மக்களைத் தண்டிக்க முன்வரவில்லை. அமெரிக்காவின் வற்புறுத்தலினால் ஈராக் மக்கள்மீது கொடுமையான பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. தமது சொந்த எண்ணெய்யைக் கூட விரும்பியவாறு விற்க அனுமதிக்கப்படவில்லை. சிறுவர்களுக்கான பால்மா, மருந்துகள், பல்கலைக்கழக புத்தகங்கள் என அனைத்து அடிப்படை வசதிகளும் மறுக்கப்பட்டன.

ஈராக் மீதான பொருளாதாரத் தடையால் ஐந்து வருடங்களில் 5லட்சம் சிறுவர்கள் மருந்துகள் இன்றியும், போஷாக்கு இன்றியும் மரணித்துள்ளதாக கூறுகின்றது யுனிசெப். ஈராக் மீது பாரிய பொருளாதாரத் தடை விதித்தாலும் ஈராக் விடயத்தில் அமெரிக்கா திருப்தி காணவில்லை. பேரழிவு தரக்கூடிய உயிரியல், இரசாயன ஆயுதங்களை ஈராக் தன்வசம் வைத்துள்ளது எனும் குற்றச்சாட்டை முன்வைத்து ஈராக்கிற்கு பாரிய அச்சுறுத்தல் விடுத்து வந்தது அமெரிக்கா. அமெரிக்காவில் கிளின்டனின் நிர்வாகத்தில் ஈராக் மீது விமானத் தாககுதல் நடாத்தப்பட்டது.

2000ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஜுனியர் புஷ் தன் தந்தைக்கு ஒருபடி மேலே சென்று ஈராக்கை மீண்டும் துவம்சம் செய்து சதாம் ஹுசைனை ஒழிப்பதையே தனது வெளியுறவுக் கொள்கையில் முதலிடம் கொடுத்தார். ஈராக் பேரழிவு ஆயுதங்கள் வைத்திருக்கின்றது எனும் குற்றச்சாட்டை பூதாகரமாக்கி டொனிபிளேயருடன சேர்ந்து ஈராக்கை அழிக்க புஷ் நிர்வாகம் சகல முயற்சிகளையும் மேற்கொண்டது. இதற்கு அமெரிக்காவிலேயே எதிர்ப்புக் கிழம்பியது.


புஷ்ஷின் முதல் நாலாண்டு பதவிக்காலத்தில் வெளியுறவுச் செயலாளராகவிருந்த கொலின் பவல் சதாம் ஹுசைனை அகற்ற வேண்டும் அதற்காக ஈரக்கை ஆக்கிரமிக்க கூடாது என வலியுறுத்தியுள்ளார். அப்போது பாதுகாப்புச் செயலாளராகவிருந்த டொனால்ட் றம்ஸ்பெல்ட், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலீசா ரைஸ், உப ஜனாதிபதி டிக்செனி ஆகியோர் ஈராக்கை ஆக்கிரமிக்க வேண்டும் எனும் கோட்பாட்டுடன் இருந்தனர். ஆனால் கொலின் பவலின் வாதம் செல்லுபடியற்றதாகியது.
1990ம் ஆண்டு கூட்டுப்படைகள் ஈராக்கை தாக்கியபோது அமெரிக்கப் படைகளுக்கு தளபதியாகவிருந்தவர் கொலின் பவல்.

1990ம் ஆண்டு ஈராக் மீது நடாத்தப்பட்ட பாலைவனப்புயல் இராணுவ நடவடிக்கையின் கதாநாயகனே கொலின்பவல். இவரின் அந்தத் திறமைக்காகத்தான் மகன் புஷ் இவரைத் தனது வெளியுறவுச் செயலாளராக நியமித்தார். கொலின்பவல் ஈராக்கை ஆக்கிரமித்தால் அமெரிக்கப்படைகள் பாரியளவு நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என எதிர்வு கூறினார். ஆனாலும் இதையெல்லாம் மீறி 2003ம் ஆண்டு ஐ.நா சபையின் ஒப்புதல் இல்லாமல் அமெரிக்க-பிரிட்டிஷ் படைகள் ஈராக்கைத் தாக்கின. 2003ஏப்ரல்09ம் திகதி பக்தாத் நகரைக் கைப்பற்றி சதாம் ஹுசைனின் மாபெரும் உருவச் சிலையை தகர்த்தெறிய ஈரக்கின் கட்டுப்பாடு அமெரிக்க-பிரிட்டிஷ் படைகளின் வசமானது.

புஷ் உட்பட ஈராக்கை ஆக்கிரமிக்க கங்கணம் கட்டியவர்கள் வெற்றிக்களிப்பில் திளைத்தனர். ஈராக்கைக் கைப்பற்றி சுமார் 3வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் ஈராக்கை ஆக்கிரமிக்க அமெரிக்கா கூறிய பேரழிவு ஆயுதங்கள்தான் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஈராக்கை ஆக்கிரமிக்கும் முன் ஐ.நா பாதுகாப்புச் சபையின் சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஹான்ஸ் பிலிக்ஸ் என்பவரது தலைமையில் பேரழிவு ஆயுதங்களை பரிசோதிக்கவென ஆயுதப் பரிசோதனைக் குழுவை அமைத்தது. இவர்கள் ஈராக்கில் எவ்வளவுதான் தேடியும் பேரழிவு ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனாலும் இவையெல்லாவற்றையும் மீறியே ஈராக்கை ஆக்கிரமித்தது அமெரிக்கா.

இப்போது சதாமின் இரு புதல்வர்களைக் கொன்று, சதாமைக்கூட கைதுசெய்துள்ளது. ஆனால் இன்னும் பேரழிவு ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. அதே சமயம் மக்களின் இன்னல்களும் தீரவில்லை. சதாமின் அடக்குமுறையிலிருந்து விடுபட்டது ஈராக் மக்களுக்கு மகிழ்ச்சிதான் என்றாலும் இஸ்லாமிய சமூகம் மீதான அமெரிக்காவின் அண்மைக்கால வரலாறுகளை மறந்துவிட்டு, அமெரிக்காவின் உள்நோக்கம் குறித்து பாராமுகமாக இருகக்கவும் ஈராக் மக்கள் தயாராக இல்லை. இதைத்தான் ஈராக்கில் தினமும் நடக்கும் தாக்குதல்கள் கூறுகின்றன. ஈராக் மீதான அமெரிக்க யுத்தம் முடிவடைந்து விட்டது என அமெரிக்க அதிபர் புஷ் அறிவித்த பிறகு சுமார் 2800 அமெரிக்கப் படை வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஈராக்கில் இவை மட்டுமன்றி தினமும் சியா, சன்னி முஸ்லிம்களிடையே மோதலும் நடக்கின்றது. ஈராக் மக்களை அமைதிப்படுத்தவென அமெரிக்காவினால் உருவாக்கப்பட்ட பொம்மை அரசாங்கம் கூட காலைவாரிவிட்டது. பக்தாத் பொறியில் வசமாக மாட்டிக்கொண்ட நிலை அமெரிக்காவிற்கு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கின்றார் புஷ். இதே நிலைதான் ரொனி பிளேயரிற்கும்.

## தமிழக முதல்வரானார் கருணாநிதி பிரபா குழுவின் ஆதரவாளர் எனக் கருதப்படும் வை.கோவிற்கு முக்காடிட்ட தமிழக மக்கள்



நடந்து முடிந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் தி.மு.க கூட்டணி அதிகமான இடங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளதால் அதன் தலைவரான மு.கருணாநிதி நாளை தமிழகத்தின் புதிய முதலமைச்சராக பதவியேற்கின்றார். தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தின் சட்டமன்றத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட மு.கருணாநிதி தமிழக ஆளுனர் பர்ணாலாவை சந்தித்து ஆட்சியமைக்கும் உரிமை கோரியிருந்தார்.

தேர்தல் வெற்றியையடுத்து அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்த கருணாநிதி தான் தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதி அனைத்தையும் நிறைவேற்றுவதாகவும் உறுதியளித்தார்.

இதேவேளை அ.தி.மு.க உடன் கூட்டணி வைத்துக் கொண்டு தேர்தலில் 200 இடங்கள் கைப்பற்றுவோம் என சூளுரைத்த பிரபா குழுவின் தீவிர ஆதரவாளர் எனப்படும் ம.தி.மு.க தலைவர் வை.கோவின் கட்சி தான் போட்டியிட்ட 35 தொகுதிகளில் 06 தொகுதியில் மாத்திரமே வெற்றிபெற்றுள்ளது. இம்முடிவானது தமிழக மக்கள் பிரபா குழுவை நிராகரித்ததையே காட்டுகின்றது என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள்.

கடந்த 30.04.2006 அதிகாலை இந்த மண்ணினதும் மக்களினதும் துரோகிகளுக்கும் எம் வீர மறவர்களுக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் சம்பவ இடத்தில் எமது ஐந்து போராளிகளும், படுகாயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைகள் பயனளிக்காமல் நான்கு போராளிகளும் எம்மண்ணினதும் மக்களினதும் விடுதலை எனும் உயர்மிகு இலட்சியத் தீயை இம்மண்ணில் கொழுந்துவிட்டெரிய தம்மை வித்தாக்கினர். இவ்வீர மறவர்களின் இலட்சியங்களைச் சுமந்த நாம் அவர்களின் விடுதலை எனும் கனவை நனவாக்க சமர்க்களம் புகுந்துள்ளோம்.





பாசிசத்திற்கெதிராய் உண்மைகளை உடனுக்குடனும் தமிழ் மக்களின் உள்ளக் குமுறல்களை உலகமறியச் செய்யும் அதிரடி இணையத்தளத்தைப் பாருங்கள்

www.athirady.com


உண்மைகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது உத்தியோகபூர்வ இணையத்தள முகவரி www.tamilalai.org

எமது பத்திரிகை மற்றும் இணையத்தள தொடர்புகளுக்கும் விமர்சனங்களுக்கும் tamilalainews@yahoo.com